ஸ்ரீ

# செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு





சிலம்பு-கச] யுவ—புரட்டாசி [பரல்-உ


## திருவாசகம்

### அச்சோப்பதிகம்

முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே.

பதவுரை:—

முத்திநெறி அறியாத—வீடு அடைதற்கு ஏதுவாயுள்ள நெறி இன்னது என்று (சிறிதும்) அறியாதிருந்த.

மூர்க்கரொடு முயல்வேனை—மூடர்களுடன் (பழகி நிலையுள்ளது உலக வாழ்வே என்று எண்ணி) வினை செய்து கொண்டிருந்த எனக்கு.

பழவினைகள் பாறும்வண்ணம்—முன் பல பிறவிகளில் நான் செய்த சஞ்சித வினைகள் என்னை அடையாது விட்டு நீங்கும்படி.

பத்திநெறி அறிவித்து (உம்)—(உண்மை ஞானத்துக்குச் சேர்ந்த சரியை, கிரியை, யோகம், ஞானம் அடங்குவனவாயுள்ள) அன்பு நெறியை எனக்குக் காட்டிக் கற்பித்தும்.

சித்தம் மலம் அறுவித்து (உம்)—(அவ்வாறு கற்பித்தபடி நான் ஒழுகினதனாலுண்டாகும் பயனாக) எனது உள்ளத்தில் தனது அருட்பேரொளியை நிறைவித்து அதனால் அதனைவிட்டு மும்மலத் தொடக்கு முற்றிலும் நீங்கும்படி செய்தும்.

சிவமாக்கி (உம்)—(அவ்வாறு முற்றிலும் மும்மலங்கள் நீங்கியதாலுண்டாகும் பயனாகச்) சிவமாந் தன்மையை அடையும்படி செய்தும்.

எனை ஆண்ட—(சிவமாந்தன்மை அடைந்த) என்னைப் பின் தனது அடிமையாக ஆண்டு பேரின்பம் அருளிய.

அத்தன்—என் தந்தையாகிய சிவபெருமான்.

எனக்கு அருளியவாறு—எனக்கு அருள்செய்தது போல.
ஆர்பெறுவார்—வேறே யார் பெறவல்லார்?

## விளக்கவுரை:—

முத்திநெறி—சமயம் என்பது மக்களுக்கு இறைவனை யடைந்து பேரின்ப முறுதற்குக் காட்டும் நெறி (வழி) யாகும். சைவ சமயத்திலும் சமய இலக்கணமுள்ள பிற சமயங்களிலும் இரு பெரும் பிரிவுகளுள் ஒன்று உலகநெறி, மற்றொன்று வீட்டுநெறி உலக நெறியில் சமயங்கள் மக்களுக்கு அறத்தின்வழி ஈட்டிய பொருளைக் கொண்டு அறத்தின்வழி உலக இன்பமாகிய சிற்றின்பத்தை நுகரும் முறையைக் கற்பித்து, உலக போகத்தில் அமிழ்த்தி, போகத்திற் கேதுவாகிய பொருள்களில் பற்று வைத்து ஒழுகச் செய்யும். பல பிறவிகளில் உலக நெறியிலொழுகி அநுபவ முற்றியதனு லுண்டாகும் பயனுக நிலையில்லாத உலகவாழ் வின்பத்தில் உவர்ப்பானது மனதில் அடையப்பெறும் பக்குவ அறிவுடைய மக்களுக்குச் சமயங்கள் வீட்டு நெறியைக் கற்பிக்கும். இந் நெறியில் மக்கள் உலகவாழ்வின் குறிக்கோள் இன்னது என நன்கு உணர்ந்து அறம், பொருள், இன்பம் மூன்றிலும் பற்றுவிட்டுப் பேரின்பத்தையே அடையுங் கருத்துடையவர்களாய் அருளே கணகணுக்கொண்டு அருளின் வழியிலே தங்கள் அறிவு வேட்கை செயல்களைச் செலுத்தி ஒழுகி, முறையே சரியை கிரியை யோகம் ஞானம் என்ற நிலைகளை அடைந்து மெய்யறிவும், மெய்யன்பும் பெற்றுப் பேரின்பம் அடைவார்கள். இந்த நெறியே இங்கே கூறப்படும் முத்தி நெறி—முத்தி என்ற வடமொழிச் சொல் கட்டு விடுதல் என்று பொருள்படும். (முஞ்ச்=To release). உலகப்பற்றை விட்டு இறைவனையேபற்றிப் பேரின்பம் அடைதற் கேதுவாகிய நெறி முத்திநெறி. இதுவீட்டு நெறி என்று தமிழில் கூறப்படும்.

அறியாத மூர்க்கரொடு முயல்வேனை—பெறுதற்கரிய மானுடப் பிறவியைப் பெற்றிருந்தும் பெறுதற்கரிய பேரின்பப் பேறு இன்னது என்று அறியாது சிற்றின்ப உலக வாழ்வில் உழன்று வருந்துகிற மக்களை 'மூர்க்கர்' என்றூர். மூர்க்கராவார் இன்னது செய்தால்; இன்னது விளையும் என்று அறியாது ஒழுகுகிறவர்கள். இதனுல் மூர்க்கர் என்ற சொல்லுக்கு மல மறைப்பை அறியாத மூடர் என்று பொருள் உரைக்கப்பட்டது. முயலுதல்=வினை செய்தல்; அறிவுவேட்கை செயல்களை உலக விடயங்களிற் செலுத்தி வினைசெய்தல். உலக நெறி ஒழுகுகிறவர்கள் ஒன்று சேர்ந்து ஒருவரை யொருவர் மதித்து ஒழுகுகிறவர்களாதலின்

மூர்க்கரொடு முயல்வேனை என்றார். முயல்வேனை—உயர்திணை ஆண்பால் தன்மை ஒருமை வினையாலணையும்பெயர் : வழக்கமாய் முயன்றுவந்தவனாகிய நான். முயல்வேனை என்பது முயல்வேனுக்கு என்ற நான்காம் வேற்றுமைப் பொருளில் வந்த வேற்றுமை உருபுமயக்கம். முயன்றேன் (முயன்றுவந்த எனக்கு) என இறந்தகாலத்தாற் கூறற்பாலது தெளிவுபற்றி முயல்வேன் என எதிர்காலத்தாற் கூறப்பட்டது.

பழவினைகள் பாறும் வண்ணம் பத்திநெறி அறிவித்து—பத்திநெறி என்பது இறைவனைப்பற்றும் மெய் அன்பு நெறி ; உலக அன்பு நெறி அன்று.

இறைவன், உயிர்கள் தன்னை அடைந்து பேரின்பம் பெறும் பொருட்டுச் சலிப்பின்றிச் செய்து வரும் பேரருட் செயல்களை அறிந்து நினைந்து அகங் குழைந்து உருகி அவனிடத்து அன்பு செய்வது மெய் அன்பு ஆகும். இவ்வாறு அறிந்து செய்யும் அன்பே அழுத்தமாயுள்ள மெய்யன்பாயிருக்கும். இந்த மெய்யன்பானது தன்னை உடையவர்களை இறைவனுடைய திருவடிகளிற் சேர்க்கும் திறனுடையது ஆதலின் பத்தி நெறி யறிவித்து என்றார். "உன் குரை கழற்கே கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே" என்று அடிகள் வேறொரு பாட்டிற் (558) கூறியது காண்க. உண்மைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் நான்கும் அரும்பு, மலர், காய், கனிகள் போன்ற வளர்ச்சி முறைகளாக இந்தப் பத்தி நெறியாகிய மெய்யன்பு நெறியில் அடங்கும். இந்தப் பத்தி நெறியும் முதலாவது வரியிற் கூறப்பட்ட முத்திநெறியும் ஒன்று தான், வேறன்று. பழவினைகள்—முன் பல பிறவிகளில் ஈட்டப்பட்டு நுகர்ந்து கழிக்கப்படாது புத்தி தத்துவத்தில் சூக்குமமாய்த் தங்கியிருக்கும் வினைத்தொகுதியாகிய சஞ்சித வினைகள். மெய்யன்பு நெறியில் நின்று இறைவனோடு ஏகமாய் நின்று அவன் பணியாக எல்லா வினைகளையும் செய்யும் மக்களுக்கு ஆகாமிய வினை ஏறாது எடுத்த பிறவி நுகர்ச்சிக்கு முகந்து கொள்ளப்பட்ட பிராரத்த வினை, உடலூழாய்க் கழியும் ஆதலின் அடிகள் எஞ்சி நின்ற சஞ்சித வினையைப் பழ வினைகள் என்றார். பாறுதல் என்பது ஓடுதல்; அதாவது, தங்காது விரைவில் அகலுதல். தீயின் முன் பஞ்சுபோல, தீக்கையால் சஞ்சித வினை அழிதலின் பாறும் வண்ணம் என்றார்.

(1) சித்தம் மலம் அறுவித்து. (2) சிவம் ஆக்கி. (3) எனை ஆண்ட (ஆண்டு பேரின்பமருளிய)—சிவாநந்த அநுபோகத்துக்கு இலக்கணமா யமைந்துள்ள இம் மூன்றும் முறையே வேறாதல், உடனாதல், ஒன்றாதல் என்னும் மூவகைச் சிறப்பு இயல்பு அத்துவித நிலைகளைக் குறிக்கின்றன. 'இன்றெனக்கருளி' என்ற முதற்குறிப்புப் பாட்டிற் கூறப்பட்டபடியே இந்தப் பாட்டிலும் அவை கூறப்பட்டிருக்கின்றன. கூறப்பட்ட சொற்கள் மாத்திரம் வேறு. ஆதலின் அப்பாட்டின்கீழ்க் கூறப்பட்ட குறிப்புகளை இவற்றிற்குங் கொள்க. பத்திமையும் பரிசுமிலா என்ற

முதற்குறிப்புப் பாட்டிலும் இந்த மூவகை அத்துவித நிலைகளும் வேறு சொற்களாற் கூறப்பட்டிருக்கின்றன. இந்திரிய வய மயங்கி என்ற முதற்குறிப்புப் பாட்டில் சிந்தைதனைத் தெளிவித்து என்றும், சிவமாககி என்றும், எனை ஆண்ட என்றும், இந்தப் பாட்டிற் போலவே கூறப்பட்டுள்ளன. ஆனால் அந்தப் பாட்டில் சிந்தைதனைத் தெளிவித்து என்பதற்கு மட்டும் இந்தப் பாட்டில் சித்தமலம் அறுவித்து என்பது சிந்தை தெளிவித்தலுக்குக் காரணமாகக் கூறப்பட்டுள்ளது. இப்பாட்டுக்கள் ஒன்றை யொன்று விளக்குவனவாயுள்ளன. இந்த மூன்று அத்துவித நிலைகளும் பத்தி நெறி என்று இந்தப் பாட்டிற் கூறப்பட்டபடியால் உண்மைச் சரியை கிரியை யோகம் ஞானங்கள் பத்தி நெறியில் எவ்வாறு அடங்கும் என்பது இங்கே குறிக்கத் தக்கது. உண்மை ஞானத்துக்குச் சேர்ந்த ஞானத்தில் சரியை சித்தமல மறுவித்து என்பதிலும், ஞானத்தில் கிரியையும் யோகமும், சிவமாக்கி என்பதிலும், ஞானத்தில் ஞானம் எனை ஆண்ட என்பதிலும் அடங்கும். உயிரானது ஞானத்தில் சரியையால் மாயைத் தொடர்புடைய மலம் முற்றிலும் நீங்கப் பெற்றும், ஞானத்தில் கிரியை யோகங்களால் அருள் விளக்கம் அடைந்து சிவனுடைய எண் குணங்களும் பதியப் பெற்றுச் சிவமாகியும், ஞானத்தில் ஞானத்தால் பேரின்பப் பேற்றினிமித்தம் சிவனால் அடிமையாக ஆண்டருளப் பெற்றும் சிவனுடைய திருவடிகளை அடைகின்றது. இந்த மூன்று நிலைகளும் காரிய சுத்த நிலைக்குச் சேர்ந்தவை. காரண சுத்த நிலையே நாவினால் இன்னது என்று கூற வொண்ணாத சிவானந்த சிவாநுபவ நிலையாகும். சித்தமலம் அறுவித்து என்பதிலும் சிவமாக்கி என்பதிலும் உம்மை உருபுகள் தொக்கன.

அத்தன்—சிவபெருமானுக்குப் பேரின்பம் அடையப் பெறும் தாம் மகன் என்னும் கேண்மையால் அவனுடைய உரிமைகள் எல்லாம் அடைதல் பற்றி அடிகள் சிவபெருமானை இந்த இடத்தில் அத்தன் என்று கூறி அருளினர். சிவஞான சித்தியார் எட்டாவது சூத்திரம் முதலாவது பாட்டில் கூறப்பட்டிருக்கும் கருத்துக்களை நோக்குக.

ஆர்பெறுவார்—அடிகள் தம்மைச் சிவபெருமான் திருப்பெருந்துறைக்கு வந்து ஆட்கொண்டு பேரின்ப மருளிய அரிய நிலையை அதற்கு முன்னுள்ள தமது நிலையுடன் ஒப்பிட்டுப் பார்த்தும் அளவிலடங்காத் தமது வியப்பைக் கூறுகின்றார். "என் சிரத்தினுறுகால் பிறர்க்கரியோன்" என்று அடிகள் திருக்கோவையார் 126 வது பாட்டிற் கூறியது காண்க.

அச்சோவே—அச்சோ என்பது வியப்புக் குறிப்புச்சொல். 'ஏ அசை.'

மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

69

# புதுக் கவிகள்-Original Poetry

## திருவள்ளுவர் சிந்தனை

[பண்டித. அ. நடராஜ பிள்ளை]

(மயங்கிசைக் கோச்சகக் கலிப்பா)

(தரவுகள்)

"தென்றமிழ்த்தாய் செய்தவத்தாற் சிறப்புள்ள தென்னாட்டில்,
மன்மரபில் வந்துதித்த மாபுலவோய்! வாய்மைமுதல்,
பிறனில்லை விழையாமைப் பேரறங்க ளிற்சிறந்தோய்!
அறனில்லை யரசியலி னறிவற்று லெனவுணர்ந்து,
பொதுமக்கள் பலர்க்குதவி புரிந்திடவே, அரசியலிற்
பொதுமக்கள் போற்றமைச்சர் புகழ்வாழ்வி லமர்ந்தோயே!" 1

"பல்லூழி முதற்கணிலே பலர்பரவத் தமிழ்நாட்டில், [கும்
எல்லோனின் கதிர்த்திரள்போ லிருந்ததமிழ் மொழித்தாய்க்
பொல்லாத காலமெனப் புரண்டுவந்த கடற்பெருக்கால்,
எல்லோரும் போற்றுமறை யிடருற்றுப் போய்மறைய,
கல்லார்போற் றமிழ்மக்கள் கருத்திலராய் வாழ்நாளில்,
வல்லோய்! நீ திருக்குறளைத் தமிழ்மறையாய் வகுத்தனையே" 2.

(தாழிசைகள்)

"கூர்த்தமதி மிகக்கொண்டு குவலயத்தோர்க் குதவியங்கே
சீர்த்தமதி வள்ளுவரென் றிருப்பெயராஞ் சிறப்புற்றாய்." 1.

"வள்ளுவரென் பெயர்ப்பொருளை மறந்தார்தோ! தமிழ்மக்கள்
வெள்ளைமொழிப் பொருள்கொள்ள விதித்தவிதி கொடுவிதியே!" 2.

"தமிழ்மறை நூற் றனிப்பயனுந் தகைமைகொடு முப்பாலாய்த்
தமிழ்மறையாந் திருக்குறளைத் தனிச்சிறப்பா யெமக்களித்தாய்" 3.

"பொருளறியா வாரியரிற் பொல்லோர்கள் வடமொழியிற்
பொருளாகு நாற்பொருளே போற்றினிரென் றேகுரைப்பர்." 4.

"மக்கட்ம வாழ்க்கைக்கு வாய்த்திடுந வின்பமதே
மிக்கதென வீட்டுக்கே யின்பப்பால் விளம்பினையே." 5.

"பேரின்ப வடிநிலையா மகப்பொருளின் பெருமையினை
ஓர்ந்தறியார் காமமென வொதுக்கியதென் பேதமையே!" 6.

"பன்னாட்டு மக்களது பரந்தபல கொள்கைகளும்
நந்நாட்டுக் குரியவென்ற நாவன்மை மிகப்பெரிதே!" 7.

"பொதுவுடைமைக் கருத்ததனை யொப்புரவாய்ப் பொதிந்துவைத்த
இதுபுதுமை யெனவியக்க வெந்நாளு நின்றனையே!" 8.

(தனிச்சொல்)

"எனவுன்னி."

(சுரிதகம்)

"நிற்பெரு நிலையை நேடினரேங்கிப்
பற்பலர் நினது பழமையைத் துருவிக்
கழகம் பலகாண் காலையில், சான்றோர்
பழகுறு திருக்குறட் பல்கடற் பெருக்கிற்
றமிழர் பலருந் தாவியே குதித்தே
அமிழ்தெனும் பல்பொரு ளகத்தே கொண்டு,
சீர்திருத் தம்மெனுந் திருக்கரை சேர்ந்து
வீறுகொண் டிடயான் வேண்டினன்
மாறுகொ ளயலவர் மாப்பெரு நடுவணே."

---

# இலக்கணமும் இலக்கியமும்:

# LANGUAGE AND LITERATURE

## திருவள்ளுவர்

[ஆசிரியர் மறைமலையடிகள்]

(முன் ௨௩-ம் பக்கத்தொடர்ச்சி)

மேலுந், திருவள்ளுவர் திருமைலையில் ஓர் இருப்பை மரத்தின் கீழ்க்கண்ணதான குடியொன்றிற் றோன்றினாரென வழங்குந் தொன்றுதொட்ட வழக்கிற் கேற்பவே, இன்றும் அவ்விருப்பை மரமும், அவர் தோன்றிய குடியின் அடையாளமாக அம்மரத்தின் அருகே அவரது திருவுருவம் நிறுத்திய திருக்கோயிலொன்றுந் திருமைலையி லிருக்கின்றன; அதுபோலத், திருவாலவாயிலாதல் :வேறெந்த வூரிலாதல் அவை யிரண்டும் இருத்தல் அறியப்படாமையிற் றிருமைலையே அவர் பிறந்தருளிய இடமாகுமெனக் கபிலரகவல் நுவலும் வரலாறே உண்மை வரலாறாகு மென்று கடைப்பிடிக்க.

இனித், திருமைலையில் ஒரு துளுவ வேளாளர்பால் விடப்பட்டு அவரால் வளர்க்கப்பட்டு வந்த மகவைக் கண்டு, அவ்வேளாண் டலைவரின் உறவினர் "யாரோ இழிகுலத்தார் காமத்தாற் பெற்றுப் போகட்ட அகதிப் பிள்ளையை இவர் வளர்க்கின்றார்! ஈதென்னை!" என்று பழி கூறாநிற்ப, அதற்கு மிக வருந்திய அச்செல்வர் அம்மகவைப் பிரிதற் காற்றாராய்த் தம் விளைபுலத்தில் உழுதொழில் செய்யும் பறைக் குடிகளுக்குக் குருவாய் உள்ள ஒரு வள்ளுவனை அழைத்து, அவன் கையில் அதனை ஈந்து "இதனைப் போற்றி வளர்ப்பாயாக!" எனக் கூறி, அவற்கு அதன்பொருட்டு ஆம் செலவுகட்கும் வேண்டும் பொருள் நல்கினார். அதுமுதல் அக்குழவி அவ்வள்ளுவன்பால் வளர்வதாயிற்று. அங்ஙனம் வள்ளுவனாற் போற்றி வளர்க்கப்பட்டமை பற்றியே நம் ஆசிரியர்க்குத் திருவள்ளுவரெனும் பெயர்வழங்குவ தாயிற்று. ஆகவே, ஆசிரியர்க்கு அது சாதிபற்றி வந்த பெயரே யாதல் திண்ணம். இஃது ஆசிரியரோடு ஒரு காலத்தினரான மாமூலனார்,

"அறம்பொரு ளின்பம் வீடென்னும் அந்நான்கின்
திறந்தெரிந்து செப்பிய தேவை—மறந்தேயும்
வள்ளுவன் என்பானோர் பேதைஅவன் வாய்ச்சொற்
கொள்ளார் அறிவுடை யார்"

என்று தாமருளிய செய்யுளால், ஆன்றபுலமையிற் சிறந்து தெய்வத் தன்மையுடையராய் விளங்கும் பெருமானைச் சாதிபற்றி 'வள்ளுவன்' என இழித்துக் கூறுவோன் எவனேனும் உளனாயின் அவன் அறிவில்லா மடவோனே யாவனென வலியுறுத்திச் சொல்லிய வாற்றால் நன்கு விளங்கும்.

வள்ளுவர் என்பார் பறையர்க்குக் குருமாராய்க் குறி சொல்லிப் பிழைக்கும் ஒரு வகுப்பினர் ஆவர். இச்சொல் 'வள்' என்னும் முதனிலையிற் பிறந்து 'தோல்வினைஞர்' எனப் பொருள்படுவதாகும். 'வள்பு' என்பது தோலிற் செய்த வாரை யுணர்த்துதல், "மாசற விசித்த வாருறு வள்பின்" என்னும் புறநானூற்றானும் (50), "வள்புதெரிந் தூர்மதி வலவ" என்னும் ஐங்குறு நூற்றானும் (486) அறியப்படும். வாரைக் கொண்டு இறுக்கிக் கட்டப்படும் பறையினை அறைந்து ஊரார்க்குச் செய்தி யறிவிக்குந் தொழிலினை யுடையார் வள்ளுவரெனப் பட்டமை,

"திருநாள் படைநாள் கடிநாள் என்றிப்
பெருநாட் கல்லது பிறநாட்கு அறையாச்
செல்வச் சேனை வள்ளுவ முதுமகன்"

எனப் பெருங்கதையுட் போந்த பகுதியானும் (2—32—34) நன்கு விளங்காநிற்கும். இங்ஙனம் பறை யறையுந் தொழிலினையுடையார் பண்டைக் காலத்திற் 'பறையர்' ஆயினதுபற்றி, அவரிற் சிறிது ஏற்ற முடையார்க்கு 'வள்ளுவர்' எனும் பெயர் வழங்கலாயிற்று; யாங்ஙனமெனிற், பிறர்தமக்கு நேரும் ஊழ்வினைப் பயன்களை நன்களந்துரைக்குந் தொழில், பின் நேர்வதனைப் பறைசாற்றி யறிவிக்குந் தொழிலோடு ஒப்புமை யுடையதாகலின் என்பது. கல்வி யறிவு சிறிதுமில்லாப் பறையர்க்குட் கோணாற் புலமை நிரம்பிப், பிறர்தம் வினைப்பயன்களை அளந்துரைக்கும் வள்ளுவர், அவரின் வேறாய், அவர்க்குக் குருமாராய் அமைந்து பாராட்டப்படுதல் இயற்கையேயாம்.

இனி, நம் பேராசிரியர் இங்ஙனம் வள்ளுவரெனப் பெயர் பெற்றதன் காரணம் உணராமையினாலோ, அல்லது அவரது சாதியிழிபினை மறைத்து அவர்க்கோர் ஏற்றங் கற்பிக்க விழைந்த கருத்தினாலோ, உலகத்தின்கண்ணுள்ள எல்லாச் சாதியினராலும், எல்லா மதத்தினராலும் ஒருங்கு தழுவப் படுஞ் செந்தமிழ் மாமறையை உலகத்தினர்க்கு வழங்கிய நல்லிசைப் புலவர் மாமணியை உயர்குலத்தவராகக் கூற வேண்டுமென்னுஞ் சாதிப்பற்றினாலோ, ஒருசாரார், ஆசிரி

யர் அரிய பெரிய பொருள்கள் அகத்தடங்கிய 'திருக்குறளை' உலகிற்கு வழங்கியருளின வள்ளன்மை தோன்ற அவர்க்கு வள்ளுவர் எனும் பெயர் வழங்கலாயிற்றென் றுரைகூறினார். அச்சொல் அவர் கூறுமாறு வள்ளன்மைப் பொருள் பயப்ப தாயின், அது 'வள்ளல்' என நிற்கவேண்டுமல்லால் 'வள்ளுவர்' என நில்லாது. தொல்லாசிரியர் நூலுரை வழக்கில் யாண்டும் வள்ளுவர் என்னுஞ் சொல் வள்ளன்மைப் பொருள் தரக் காணாமையின், அச்சொல்லுக்கு யாங்கூறியதே உண்மைப் பொருளாதல் திண்ணமென்க.

இனி, மற்றுமொருசாரார் "வள்ளுவன் என்னுஞ் சொல்லிற்குக் கற்றுணர்ந்தவன் என்பது தாதுப்பொருள்" என்று பொருளுரைத்தார். 'வள்' என்னும் முதனிலையால் உணர்த்தப்படும் பல பொருள்களுட் 'கற்றுணர்தல்' என்னும்பொருளும் ஒன்றென்பது பழைய தமிழ்நூல் எதனுனும் பெறப்படவில்லை. அற்றன்று, 'வள்' என்பது செழுமை என்னும் பொருளில் வருமாகலின், இவ்விடத்திற்கு ஏற்பக் 'கல்விச்செழுமை' என்று பொருளுரைத்தலே எமது கருத்தாகுமெனின்; அது பொருந்தாது; 'வள்' என்னும் முதனிலையே கல்விச்செழுமையினை உணர்த்துவதன்று; அது ஈறு இடைநிலை முதலான உறுப்புகளோடு கூடி ஒரு சொற்றொடரில் நின்ற வழி, அச்சொற்றொடர்ப் பொருளுக்கு இணங்க ஒரோ ஒருகால் அப்பொருள் உணர்த்தாநிற்கும். இன்னும், அஃது அங்ஙனம் பொருளுணர்த்துவதும், 'பம்,' 'அம்' முதலான ஈறுகளோடு புணர்ந்து 'வளப்பம்' 'வளம்' என்றாகிச், 'சொல் வளப்பம்', 'கல்வி வளம்' என வேறு சொற்களோடு இயைந்து நின்ற வழியேயாம். மற்று, வள்ளுவர் என்னுஞ் சொல்லின் முதனிலையாகிய 'வள்' என்பதற்கோ வேறு பொருளுளதாதலை முன்னரே காட்டினமாகலானும், அதன் ஈறு சாரியை முதலியன வேறுபட நிற்றலானும் அதற்கு அப்பொருளுரைத்தல் சாலாதென்க.

இனித், தமக்கு வளர்ப்புத் தந்தையாய் அமைந்த வள்ளுவத் திருமகன் கல்வியிற் சிறந்தவனாகலின், அவனாலும், அஞ்ஞான்றிருந்த ஏனைத் தமிழாசிரியராலுந் தமிழ் இலக்கண இலக்கியங்களும், பலகலை நூல்களுங் கற்பிக்கப்பட்டு, இயற்கையிலே நுண்மாண் நுழைபுல முடையராயிருந்த நம் ஆசிரியர் கலை நிரம்பிய முழுமதியெனக் கல்வி யறிவும், இயற்கையறிவும் ஒருங்கு நிரம்பித் திகழ்ந்தனர். இவ்வாறு நம் ஆசிரியர் செந்தமிழ்ப் புலமைக்கு ஒரு வரம்பாய்ப் பொலிவுறுகின்ற காலத்து இவர்க்குக் கட்டிளமைப் பருவம் நிரம்பிற்று.

(தொடரும்)

## கம்பரும் காதல் மணமும்

[வித்துவான். மா. இராசமாணிக்கம்]

இராம காதையை முதன்முதல் வடமொழியில் எழுதியவர் வான்மீகியாவர். அவரைப் பின்பற்றித் தமிழ்மொழியில் கம்ப நாடர் இராம காதையைப் பாடினாரெனினும், இடங்களுக்கேற்பத் தம் விழுமிய கொள்கைளையும், சிறந்த உண்மைகளையும், வேளாண் சிறப்பையும், தமிழர் நெறியையும் பிறவும் கூறிப் போந்தார். தமிழர் மணமுறை வாடை வீசும் இடம் இராம காதையில் மிதிலைக்காட்சிப் படலமே. இராமனது திருமணத்தைக் கூறப்போந்த வான்மீகி, 'இராமன் அரக்கியைக் கொன்று, மறையவன் வேள்வி காத்து, அகலிகையின் சாபம் தொலைத்து நேரே மிதிலையிற் சென்றுவிட்டான். கோசிகன் இராம லக்குமணரைச் சனகனுக்குக் காட்டி அவர்கள் வரலாற்றைக் கூறி வில்லைக் கொணரச் செய்கின்றான்' என்றார். எனவே, வான்மீகி இராமாயணத்தில் மணத்தின் முன்னர்ச் சீதையை இராமன் காணவில்லை என்பதும், சீதை இராமனைக் காணவில்லை என்பதும் பெறப்படுகின்றன.

கம்ப நாடரோ தாம் வளர்த்த சீதையையும் இராமனையும் வான்மீகியைப் போல் அஞ்ஞான இருளில் வைத்திலர். திருமணத்திற்கு முன்னரே—வில் இறுத்தற்கு முன்னரே—காதலர் ஒருவரை ஒருவர் சந்திக்கச் செய்தார்; இருவர் மனத்தையும் ஒன்றுபடச் செய்தார்; ஒருவர் மற்றவர் உள்ளத்தில் மாறிப் புகும்படி செய்தார்; திருமணம் வரையில், இருவரையும் காதல் நோயால் மெலிவுறும்படி செய்தார். பின்னர்க் காதல் மணத்தைக் கவின்பெற நடத்திக்காட்டுகின்றார். இத்தகைய மணமுறை பண்டைக் காலத்தில் பழக்கத்தில் இருந்தது என்பது தமிழ் நூல்களை ஆராய்ந்தோர் கண்ட உண்மை. எனவே, கம்பர் தமது தமிழர் மணத்திற்கிணங்கி இராமனையும் சீதையையும் சிறக்கவைத்துள்ளார் என்பது எவரும் மறுக்க இயலா உண்மையாகும். இனி, காதலர் சந்திப்பும் திருமண முடிவும் இற்றென விளம்புவோம்.

கோசிக முனிவனோடு இராம லக்குமணர் மிதிலையின் இயற்கை யழகையும் செயற்கை அழகையும் கண்டுகொண்டே சென்றனர். அவ்வாறு போகும்பொழுதே கன்னிமாடத்தில் இராமர் சீதையைக் காண நேர்ந்தது. மற்ற இடங்களைக் கண்டு கண்டு சென்றவர் ஜனகன் மாமனை யணுகியதும் சற்றே நிற்கலானார். அவர் நிற்க நேர்ந்த காரணம் என்னை? எனிலோ, கம்பர் அருகிருந்து கண்டவரேபோல் கூறுகின்றார்:

'கன்னிமாட முற்றத்தில் ஆண் அன்னமும் பெண் அன்னமும் ஆடிக்கொண்டிருந்தன. அவற்றைக் கண்ணுற்றுச் சனகன் மாமகள்-பொன்னின் ஒளியும் மலரின் மணமும் உண்கின்ற தேனினது இனிய சுவையும், பொன்னுக்கும் மலருக்கும் தேனுக்கும் இயற்கையாக அமைந்திருப்பதுபோல்—செவ்விய தென்மொழியாகிய தமிழ்க் கவியில் பொலியும் இன்பமே போன்றவள் நின்றிருந்தாள். அவளைக் கண்டு, அங்கு மூவரும் நின்றனர்.''

"பொன்னின் சோதி போதினுற்றம் பொலிவே போல்
தென்னுண் டேனிற் றீஞ்சுவை செஞ்சொற் கவியின்பம்
கன்னிம் மாடத் தும்பரின் மாடே களிபேடோ
டன்னம் மாடு முன்றுறை கண்டங் கயனின்றார்''.

—க. ரா. மிதிலைக் காட்சிப் படலம்.

அன்னங்கள் முன்றிலில் ஆடி இராவிடின், இராமன் அயல் நிற்கவேண்டிய நிமித்தமில்லை. ஆயினும் அவன் ஆடிய அன்னத்தைக் கண்ணுற்று நின்றானே? விடை பகருதல் எளிதே. ஆடும் அன்னத்தைக் காண்பதேபோல் மிதிலை அன்னத்தைத் தென்சொற் கவியின்பமாய சனகியையே இராமன் கண்ணுற்று நின்றான்.

தென்சொற்கவி இன்பமாய சீதை, தன்பால் அன்புடைய தாதியர் முதலிய மங்கையர், 'மானே தேனே அரிய அமிர்தமே' என்று தம் தளிர்போன்ற சிவந்த கைகளால் அவளுடைய அடிகளை வணங்கி, அவள் செல்லுமிடத்து எல்லாம் எதிரே மலர்களை அடர்த்தியாகத் தூவி வரிசையாய் நெருங்கி வர, பூவிலே தங்கும் இலக்குமியைப்போல நடமாடி விளங்குகின்றாள்! எனக் கம்பர் சீதையின் எழில்நலத்தை நாம் என்றும் மறவாதவாறு வருணித்துள்ளார்.

" தங்நே ரில்லா மங்கையர்
செங்கைத் தளிர்மானே
அன்னே தேனே யாரமிர்
தேயென் றடிபேற்றி
முன்னே முன்னே மொய்ம்மலர்
தூவி முறைசாரப்
பொன்னே சூழும் பூவி
னுதுங்கிப் பொலிகின்றாள் ''

—க. ரா. மிதிலைக்காட்சிப் படலம்.

இங்ஙனம் நின்ற சீதை இராமனைக் கண்ணுற்றாள். இராமனும் அவளைக் கண்ணுற்றான். ஜானகி இராமனை நோக்கிப்

புன்னகை புரிந்தாள் என்று தெரிகின்றது. எங்ஙனம் எனின் அன்று மாலை இராமன்,

“வாள்நி லாமுறுவல் கனிவா யமுதங்
காண லாவதோர் காலமுண்டாங் கொலோ?”

என்று சீதையை நினைத்துப் புலம்புகின்றான். இராமனும் புன்முறுவல் பூத்தனன் என்பது பெறப்படுகின்றது. எங்ஙனமெனின் சீதை இராமனை நினைந்து காதல் நோயால் புலம்புகையில், ‘முந்தியென் உயிரையும் முறுவல் உண்டதே’ என இரங்குகின்றாள். எனவே, காதலர் முறுவல் தோன்றி மகிழ்ச்சியை யூட்டியுள்ளது என்பதை அறிகின்றோம். கண்ணுக்கும் கருத்துக்கும் இயைந்த காதலர் முகத்தில் முறுவல் தோன்றுவது இயல்பே.

இவ்வாறு, கண்ணால் களவுசெய்து முறுவல் புரிந்த செவ்வியர் எதிரெதிர் நோக்கிய தன்மை இன்னபடி இருந்தது என்று கம்பர் தன் அகத்தால் சித்திரித்துக் கூறுகின்றார். ‘எண்ணுவதற்கரிய நலங்கள் வாய்ந்த சீதை இவ்வாறு நின்றிருந்த காலை ஒருவர் கண்ணோடு மற்றவர் கண்கள் ஆர்வத்தால் கவ்வி ஒன்றை ஒன்று உண்டு விழுங்கியதால், அவர்களது உணர்வும் தனித்தனி நிலையில் நிற்பதற்காற்றுவாய் ஒன்றாய்க் கலந்து விடும்படி அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள்.’

‘எண்ணரு நலத்தினாள் இனையள் நின்றுழி
கண்ணொடு கண்ணிணை கவ்வி யொன்றையொன்
றுண்ணவு நிலைபெறா துணர்வு மொன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்.’

—க. ரா. மிதிலைக் காட்சிப்படலம்.

என்று கம்பநாடர் கூறுவதை எண்ண எண்ண மெய்க்காதலின் தத்துவம் இற்றென இனிது விளங்கும். ‘இந்நாடகக் காட்சியைக் கண்ணுறப் பாக்கியம் செய்ய வில்லையே யாம்’ என அறிஞர் ஏங்குவர் எனினும் பொருந்தும். காதலின் கருத்தைக் கூறும் கம்பர் திறமே போற்றற்குரியது. அடுத்த செய்யுளில் கம்பர் பெருமான் காதலர் பார்வையின் குறியும் வேகமும் இத்தன்மைய தென்று விரிக்கின்றார்.

‘சீதையம்மை பார்த்த பார்வை யென்னும் அக்கூர்மை பொருந்திய இரண்டு வேல்களும் வலியமைந்த இராமனது இருதோள்களிலும் தைத்தன ஒலிக்கின்ற கழல்கட்டிய வீரனது சிவந்த கண்களும் அணங்கையொத்த சீதையின் தனங்

களில் தைத்தன' என்ற கூற்று, தமிழ் அகப்பொருள் துறையைத் தழுவியது என்று கூறத் தமிழ் அறிஞர் தயங்கார். கம்பர் தென் சொல் கவி இன்பமாகச் சீதையைக் கொண்டு, தமிழ் அகப்பொருள் சுவையை அவளும் இராமனும் அனுபவித்ததாகக் கூறுவது மகிழ்ச்சியை யுண்டாக்குகின்றதன்றோ ?

" நோக்கிய நோக்கெனும் நுதிகொள் வேலிணை
ஆக்கிய மதுகையான் தோளில் ஆழ்ந்தன ;
வீக்கிய கனைகழல் வீரன் செங்கணும்
தாக்கணங் கனையவள் தனத்தில் தைத்தவே. "

—க. ரா. மிதிலைக்காட்சிப் படலம்.

இங்ஙனம், கண்ணொடு கண்ணினைக் கவ்வி, உணர்வும் ஒன்றிட எதிரெதிர் கண்ணுற்று, 'பருகிய பார்வை யென்னும் கயிற்றால் கட்டி ஒருவருடைய உள்ளத்தை மற்றவர் உள்ளம் இழுத்தலால், கட்டமைந்த வில்லையேந்திய அண்ணலும் வாள் போன்ற கண்களையுடைய நங்கையும் இருவரும் மாறி மாறி மற்றவர் இதயத்தில் குடிகொண்டனர்.'

" பருகிய நோக்கெனும் பாசத் தாற்பிணித்
தொருவரை யொருவர்தம் உள்ள மீர்த்தலால்
வரிசிலை யண்ணலும் வாட்க ணங்கையும்
இருவரு மாறிப்புக் கிதய மெய்தினார். "

என்ற கம்பர் வாக்கில் மெய்க்காதலின் வண்மை பொருந்திய தத்துவத்தைத் தெளிவாகக் காணலாம். உண்மைக் காதலர் மாறி மாறி மற்றவர் இதயத்தே குடிகொள்வர். அவர்களே மெய்க்காதலர். அவர்களே ஊழ்வினை வசத்தால் ஒருவரை யொருவர் சந்தித்து இரண்டறக் கலப்பவர். இவ்வுண்மையே அகப்பொருள் இலக்கணத்துக் காதலர் மாட்டுக் காணப்படுவது.

முதலில், கம்பர் காட்டும் காதலர் இருவர் கண்ணும் கண்ணும் கவ்வியது ; பின்னர், உணர்வும் உணர்வும் ஒன்றியது. பின்னர், உள்ளமும் உள்ளமும் இழுக்க இருவரும் தம் தனி நிலை நீங்கிச் சேர்ந்தனர், ஆகவே, எஞ்சி நிற்பது உயிர் மாத்திரமே. அத்திறத்திலும், 'அவர்கள் ஒன்று பட்ட உடலுக்கு உயிரும் ஒன்றே ஆயினர்,' என்று கம்பர் முடித்து விட்டார்.

" மருங்கிலா நங்கையும் வசையில் ஐயனும்
ஒருங்கிய இரண்டுடற் குயிரொன் றாயினர். "

எனவே, இக்கம்பர், காதலர் நாடகத்தால், மெய்க் காதல் இத்தன்மைத்து என்றும், அதன் ஆதியும் முடிவும் இத்தன்மைத் தென்றும் தெளிவு படக்கண்டு, தென்சொல் அகப்பொருள் இலக்கணத்தோடு ஒப்பிட்டு மகிழ்வர் அறிவிற் சிறந்த ஆன்றோர். (தொடரும்)

---

# குறுந்தொகை

## மூலமும் விளக்க உரையும்

[இலந்தையடிகள் வித்துவான் இரா. சிவ. சாம்பசிவன்]

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

(சிலம்பு கங: பரல் கூ: ௨௧௭-ம் பக்கத் தொடர்ச்சி)

### பாலை

தலைவி, தலைவன் பொருள்வயிற் பிரிந்தானாக அவன் பிரிவுக்கு ஆற்றாது வருந்துதலைக்கண்டு தோழி கூறியது.

இதனைப் பொருள்வயிற் பிரிந்த தலைவன் நீட்டித்தவழித் தலைமகள் ஆற்றாது தோழிக்குக் கூறியது என்பர்.

பாலை பாடிய பெருங்கடுங்கோ பாடியது

16. உள்ளார் கொல்லோ தோழி, கானவர்
பொன்புனை பகழி செப்பங் கொண்மார்
உகிர்நுதி புரட்டு மோசை போலச்
செங்காற் பல்லி தன்றுணை பயிரும்
அங்காற் கள்ளியங் காடிறந் தோரே.

என்பது பொருள்வயிற் பிரிந்த விடத்துத் தலைமகள் ஆற்றாமைகண்டு தோழி கூறியது.

பதவுரை :—செம் கால் பல்லி—சிவந்த கால்களையுடைய பல்லி; பொன்புனை பகழி செப்பங் கொண்மார்—பொன்னால் அழகுறச் செய்த அம்பினைச் செம்மையாக்கும் கருமார்; உகிர் நுதி புரட்டும் ஓசைபோல—தம்விரல் நகத்தினால் உருட்டும்போது உண்டாகும் ஓசையைப்போல; தன் துணை பயிரும்—தன் துணையாகிய பெண் பல்லியை அழைக்கும்;

அம்கால் கள்ளியம் காடு இறந்தோர்—அழகிய தாள்களை யுடைய கள்ளிக் காட்டின்கண் சென்றவராகிய; கானவர்—பாலை நிலத்தவர்; தோழி—தோழியே; உள்ளார்கொல்லோ—அவ்வாறு பல்லி யழைப்பது கேட்டும் நம்மை நினையாரோ? (நினைப்பாராயின் விரைந்து மீளார் கொல்? என்பது.)

உள்ளுதல்—மனத்தில் நினைத்தல். கொல்—ஐயமும் வினாவுமான பொருளில் வந்த இடைச்சொல். தோழி—அண்மைவிளி. கொள் மார்—கொண்மார். உகிர் நுதி— விரல் நகத்துநுனி. பயிரும்—கூவியழைக்கும். கள்ளியம்—அம்—சாரியை. இறந்தோர்—கடந்துசென்றவர். இறத்தல்—கடத்தல்.

மேற்கோள் விளக்கம் :—

1. 'உள்ளார் கொல்லோ...........கள்ளியங் காடிறந் தோரே.
"உள்ளார் கோல்லோ தோழி முள்ளுடை
யலங்குலை யீந்தின் சிலம்பிபொதி செங்காய்
துகில்பொதி பவள மேய்க்கும்
அகில்படு கள்ளியங் காடிறந் தோரே.

—யாப்பருங்கலம்—மேற்கோள் பக். 86.

'உள்ளார் கொல்லோ தோழி'—
கள்ளியங் காடிறந்தோரே' } (குறுந். 67;232)

இறைச்சி :—

இயல்பாக நம்மாட்டுப் பேரன்புடையார் பல்லி துணைப் பயிறலையுங்கேட்பார் ஆதலால் கடிதில் மீள்வரெனத் தலைவியின் வருத்தம் தணித்தற்சென அன்புறு தகுந இறைச்சியுட் சுட்டினுள் தோழி என்க. என்னை?

"அன்புறு தகுந இறைச்சியுட் சுட்டலும்
வன்புறை யாகும் வருந்திய பொழுதே"

—(தொல்—பொருள்—பொருளியல் 37)

என்றாராகலின்.

மெய்ப்பாடு :—இளிவரலைச்சார்ந்த பெருமிதம். பயன்—தலைமகளை ஆற்றுவித்தல்.

1. 'உள்ளார் கொல்லோ தோழி கானவர்'—
'உள்ளார் கொல்லோ தோழி கணவர்தம்'—பிரதிபேதம்
2. 'உகிர் நுதி புரட்டு'—'உகிர் நுதி புறட்டு'—பிரதிபேதம்

3. 'அங்காற் கள்ளியங் காடிறந்தோரே'—
'கள்ளிக் காடிறந்தோரே' —பிரதிபேதம்

## குறிஞ்சி

தலைவன், தோழியினால் தலைவியின் கூட்டம் பெறவேண்டி அவளைக் குறையிரந்து பின்னின்று, அவள் தன் குறையை மறுக்காமல் இருக்கும் பொருட்டுக் காமவேட்கை முதிர்ந்தோர் செய்கையாய, 'காமமுழந்தார் மடலேறுவர்' என்னும் உலகியலைக் கூறுவான் போல் தன் குறை மறுக்கப்படுமேல் தானும் மடலேறுவன் என்பது தோன்றக் கூறியது.

### பேரெயின் முறுவலார் பாடியது

17. மாவென மடலு மூர்ப; பூவெனக்
குவிமுகி ழெருக்கங் கண்ணியுஞ் சூடுப;
மறுகி னார்க்கவும் படுப;
பிறிது மாகுப காமங்காழ்க் கொளினே.

என்பது தோழியிற் கூட்டம் வேண்டிப் பின் நின்ற தலைமகன் தோழி குறை கூறாமல் கூறியது.

பதவுரை:—காமம் காழ்க்கொளின்—காமவேட்கை முதிர்ச்சி பெறுமாயின் (அக்காலைத் தலைமகன்); மடலும்—பனைமடலையும்; மா என ஊர்ப—குதிரை எனக்கொண்டு ஏறி நடத்துவன்; குவிமுகிழ் எருக்கங் கண்ணியும் பூவென சூடுப—குவிந்த மொட்டாகிய எருக்கின் பூவால் ஆக்கப்பட்ட மாலையையும் பூவெனக்கொண்டு சூடிக்கொள்வான்; மறுகின் ஆர்க்கவும் படுப—தெருக்களில் தன் குறையைப் பலரும் அறியக்கூறி ஆரவாரஞ் செய்தலையும் பொருந்துவன்; பிறிதும் ஆகுப—பின்னும் வேறான செய்கைகளையுடையோனு மாவன்.

மா—குதிரை. காழ்—வயிரம், முதிர்ச்சி பெறல். முகிழ்—மொட்டு. குவிமுகிழ்—வினைத்தொகை. மடலேறுவார் எருக்கமாலைசூடி, என்புமாலை யணிந்து, சாம்பல் பூசிக்கொள்ளுதல் வழக்கம். 'பிறிதும் ஆகுப' என்றது வரைபாய்தல் முதலியன. அதன் கொடுமையைக்கூற அஞ்சிக் குறிப்பாற் கூறியது என்க. இவ்வாறு புரிதலினால் அருளாளர் இடையில் நின்று தலைவனையும் தலைவியையும் கூட்டுவிப்பர் என்ற கருத்தால் செய்தல்,

## குறிப்பு

"இப்பெருந்திணை வகையில், மடலேறுதலும் ஒன்றென்பது, "ஏறிய மடற்றிறம்" என ஆசிரியர் கூறுதலால் வெளியாம். இது பழையகாலத்துத் தமிழ் வழக்கங்களுள் ஒன்றாகும். பிற்காலத்தாரும் 'மடல்' என்ற ஒருவகைப் பிரபந்தம் கூறுவர். (உ-ம். வருணகுலாதித்தன் மடல், சித்திரமடல் போன்றன.) தஞ்சைவாணன் கோவையுரைகாரர் இம்மடற் செய்திபற்றிக் கூறியவை இங்கு முழுதும் அறியத்தக்கன :—

'மடலேறலாவது: தலைவன் ஒவ்வாக் காமத்தால், பனங்கருக்காற் குதிரையும், பனந்தருவிலுள்ளனவற்றால் வண்டில் முதலானவும் செய்து, அக்குதிரையின் மேலேறுவது. மடலேறுவான் திகம்பரனாய் உடலெங்கும் நீறு பூசிக் கிழி ஓவியர் கைப்படாமற்றானே தீட்டிக் கிழியின் தலைப்புறத்தில் அவன் பெயரை வரைந்து ("கழிகின்ற வென்னையு நின்ற நின்கார் மயிறன்னையும் யான், கிழியொன்ற நாடியெழுதிக் கைக்கொண்டு"—திருக்கோவை 76) என்பதனால் தலைவன் தன்னையும், தலைவியையும் கிழியில் எழுதிக்கொண்டு என்க.) கைப்பிடித்து ஊர் நடுவே நாற்சந்தியில் ஆகார நித்திரையின்றி அக்கிழியின் மேற்பார்வையும் சிந்தையும் இருத்தி, வேட்கைவயத்தனாய், வேறுணர்வின்றி ஆவூரினும், அழல் மேற்படினும் அறிதலின்றி, மழை, வெயில், காற்றால் மயங்காதிருப்புழி, அவ்வூரிலுள்ளார் பலருங்கூடி வந்து, 'நீ மடலேறுதியோ! அவளைத் தருதும், சோதனை தருதியோ!' என்றவழி, இயைந்தானாயின் அரசனுக்கு அறிவித்து அவன் ஏவலால் அவன் நினைந்து நையத்தந்து, 'மடலேறு' என்ற வழி, ஏறு முறையாவது :—பூளைப்பூ, எலும்பு, எருக்கு இவைகளால் கட்டிய மாலை யணிந்துகொண்டு அம் மாவில் ஏற, அவ்வடத்தை வீதியில் ஈர்த்தலும், அதனுருளை உருண்டோடும்போது, பனங்கருக்கு அறுத்த இடமெல்லாம் இரத்தம் தோன்றாது வீரியம் தோன்றின் அப்போது அவளை யலங்கரித்துக்கொடுப்பது. இரத்தங் கண்டுழி அவனைக் கொலைசெய்வது. புலவர் நாட்டிய வழக்கென்றுணர்க" எனக் காண்க.

இவ்வாறு, தஞ்சைவாணன் கோவையுரைகாரர் கூறிய வருணனைப்படியே மடலேற்றத்திற்குப் பழைய மேற்கோள் காண்டலரிதாயினும், "ஈசன்சாந்து மெருக்கு மணிந்தோர்கிழி பிடித்துப், பாய் சினமாவென வேறுவர் சீரூர்ப்பனைமடலே" (திருக்கோவை 74), என்பதும், 'விழுத்தலைப்பெண்ணை விளையன் மாமடல், மணியணி பொருந்தார் மார்பிற்பூட்டி, வெள்ளென் பணிந்து பிறரெள்ளத் தோன்றி, ஒரு நாண் மருங்கின்பெரு நாணீக்கித், தெருவினியலவும் தருவது கொல்லோ"—(குறுந். 282) என்பதும் ஆயவற்றால் சில பாகம் முன்னூல் வழக்குப்பெறுதல் காணலாம். கலித்தொகையுள் நெய்தற்கலி 21, 22, 24 பாடல்களிலும், குறுந்தொகை 17, 173, 182, 286 பாடல்களிலும் இம்மடலேற்றத்தின் வரலாறு நன்கு விளக்கப்பட்டிருத்தல் காணலாம். பன்னிரு ஆழ்வார்களின் ஒருவ

ரான திருமங்கை மன்னன் அருளிய திருமடல்களுக்கு மணிப்ரவாள நடையில் வியாக்கியானம் எழுதிய பேராசிரியான ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை, இம்மடலேற்றத்தின் தாற்பரியத்தைச் சங்கிரகித்து அடியில் வருமாறு எழுதுவர்:

"மடலேறுகைதான், உண்ணுதே குளியாதே உகந்த விஷயத்தை ஒரு படத்திலே விகித்து (எழுதி) அதனைக்கொண்டு திரிகையும், அறவிளைந்தால் அதன் காற்கிடையிலே விழுகையும், விழுந்தால் அங்ஙனே செல்லரிக்கக்கிடக்கையும், அங்ஙனே முடிகையுமாம்; இத்தாற் பிரயோஜனம் என்னெனின், அவன்—(திருமால்) கேட்கு மென்கை; இல்லையாகில் இதுதானே பிரயோஜனமாகை" என்பது.

இதனால் ஆரிய மக்களுள் விரும்பியன பெறவியலாத விடத்து நிகழ்த்தப்படும் பிராயோபவேசம் (வடக்கிருத்தல்) போல, இம்மடலேற்றமும் தமிழ்நாட்டார் முன்னுளில் வழங்கிவந்த தற்கொலை முறை என்பதும், அதற்கு மடன்மா கருவி என்பதும் தெரிகின்றன. நீலகிரி மலைவாணரில் படகர் என்ற சாதியாரில் (Badagar) இளைஞன் ஒருவன் தான் காதலுற்ற பெண்ணையடையக் கூடாமல் நேருமாயின், 'அவளை எவ்விதத்தும் அடைவேன், இன்றேல் தற்கொலை புரிந்து கொள்வேன்' என்று சபதம் செய்து அதனைப் பலர்க்கும் அறிவித்து முயல்வதும், அம்முயற்சியில் அவன் பெரும் பான்மை வெற்றியே பெறுவதும் இன்றும் வழக்கம் என்பர். (E. Thurston Ethnographic Notes in South India. Page 21)

மடலேற்றமும் தற்கொலை வகையே என்பது இதனோடு வரைபாய்தலையும் சேர்த்து உரைகள் கூறுதலால் அறியலாகும். ஆனால் இம்முறை, தான் விரும்பிய பெண்ணை யடையப்பெறுத விடத்து மட்டும் தமிழ் நூல்களில் வழங்குவதன்றி வேறிடங்களில் நிகழ்வதாகக் கூறப்பட்டிலது. இங்ஙனம் மடலூர்வதானது ஆடவர் மட்டும் செய்தற்குரியதன்றிப் பெண்கள் எந்த நிலையிலும் செய்யத் தக்க தன்றென்றும், அதனுல் அங்ஙனம் புலனெறி வழக்கம் செய்யக் கூடாதென்றும் தொல்காப்பியர் விதிப்பர்.

> "கடலன்ன காம முழந்து மடலேருப்
> பெண்ணிற் பெருந்தக்க தில்"

என்று வள்ளுவரும் இவ்விதியைக் குறிப்பித்தல் காணலாம். ஆயின், திருமங்கை மன்னன் தாமருளிய மடல்களிலே பெண்ணொருத்தி திருமாலைக் காமுற்று மடலேறுவதாகப் பாடினராதலால் அதற்குப்போக் கென்னை எனின்—அப்பெண், மடலேறியதாகக் கூறாது ஏறுவேன் என்ற துணையே யாதலின் இது பெருந்திணைக்குரிய மடலேற்றமன்றிக் கைக்கிளையின் பாற்படும் என்று கூறுவர் (சூ 35).

> "நனவினல் ஞாயிறே காட்டாய் நீயாயிற்
> பனையீன்ற மாவூர்ந்த வன்வரக் காமன்
> கணையிரப்பேன் கால்புல்லிக் கொண்டு"

எனக் கலித்தொகையில் வரும் பெண்மடற்கும் இதுவேகொள்க. பன்னிரு பாட்டியலுடையார், மகளிர் மடலேறார் என்றும்,

ஆனால் கடவுளரைத் தலைவராக வைத்துப் பாடுமிடத்து அவர் மடலேறுவதாகக் கூறப்படும் என்றும் இம்மடற்கிலக்கணம் கூறுவர். இதனை,

'மடன்மாப் பெண்டிர் ஏறார் ஏறுவர்
கடவுளர் தலைவ ராய்வருங் காலே'
'கடவுளர் மேற்றே காரிகை மடலே'

என்பனவற்றால் அறிக. இதனால் பெண்ணொருத்தி—ஏறுவதாக ஆழ்வார்பாடியது பிற்பட்ட இலக்கண முறைக்குப் பொருந்துவ தென்னலாம். மகளிர்க்கு மடலேறும் வழக்கில்லை என்பதை, ஆழ்வாரே பெரிய திருமடலில்,"

......................காமத்தின்
மன்னும் வழிமுறையே நிற்றுநா மானோக்கின்
அன்ன நடையா ரலரேச வாடவர்மேல்
மன்னு மடலூரா ரென்பதோர் வாசகமுந்
தென்னுரையிற் கேட்டறிவ துண்டதனை யாந்தெளியோம்
மன்னும் வடநெறியே வேண்டினோம்"

என்று பெண்ணின் கூற்றில் வைத்து அருளிச்செயதலும் ஈண்டு நோக்கற்பாலது. —(தொல்—பொருள்—ஆராய்ச்சி—பக். 30-33)

## மேற்கோள் விளக்கம்

1. 'இன்னும், அதனானே தலைமகற்காமின் அதனினாங்கு வருவதோர் கலக்கமு முளதாம் என்றது; அவை, மடலூர்தலே, வரை பாய்தலே, என்றற் றொடக்கத்தன. அது, "மாவென ............காமங்காழ்க் கொளினே" என்பது. இதனுட் சாதல் எல்லையாகக் கூறியவாறு கண்டுகொள்க.

—(தொல்—பொருள்—மெய்ப்—பக். 60-61)

2. 'மடன்மாக் கூறுமிடனு மாருண்டே'—என்ற சூத்திரத்தினுரையில், 'நோக்கி மடன்மாக்கூறும் என்க. உம்மையான் வரை பாய்வல் எனக்கூறும் இடனும் உண்டென்றவாறு. (உ - ம்) "விழுத் தலைப் பெண்ணை ... அதே"—(குறுந். 182) இது நெஞ்சொடு கிளத்தல்.

"நாணுக நாறு நனைகுழலா ணல்கித்தன்
பூணுக நேர்வளவும் போகாது—பூணுக
மென்றே னிரண்டாவ துண்டோ மடன்மாமே
னின்றேன் மறுகிடையே நேர்ந்து" —(திணைமாலை 150-16)

இது தோழிக்குக் கூறியது; இவை சாக்காடு குறித்தன. "மாவென ............கொளினே"—இதனுட் பிறிதுமாகுப என்றது வரை பாய்தலை.

"நாணொடு நல்லாண்மை பண்டுடையே னின்றுடையேன்
காமுற்றா ரேறு மடல்" —(திருக்குறள்—நாணுத்—3)

3. 'மாவென மடலு மூர்ப'—புல்லுறுப்பினைச் சொல்லும் 'தோடே மடலே' என்ற (641) தொல்காப்பியச் சூத்திரத்திற்கு மேற்கோள். —(தொல்—பொருள்—மரபு 582)

4. "மதியுடம் படுத்துத் தன் கருத்தறிவித்துப் பின் நின்று தலைமகன் ஒருசொற் சொல்லும். என் சொல்லுமோ எனின், இதனினூங்கெல்லாம் இக்கருமம் நின்னான் முடியுமெனக் கருதி வந்துழந்தேன். இனி, நின்னான் முடியாமை உணரப்பட்டது; பட்டமையின் இளிவந்தன செய்தாயினும் முடிப்பல், இதனை இன்றியமையேனாகலானென்னும் இனி இளிவந்தன செய்துமுடித்தல் என்பது, மடலூர்வதாணுயினும், வரை பாய்வதாணுயினும் என்றவாறு. அதற்குச் செய்யுட்கள் :—

"படலே றியமதின் மூன்றுடைப் பஞ்சவன் பாழிவென்ற
வடலே றயின்மன்னன் றெம்முனை போன்மெலிந் தாடவர்கள்
கடலே றியகழி காமம் பெருகக் கரும்பனையின்
மடலே றுவர்மற்றும் செய்யா தனவில்லை மாநிலத்தே"

"பொருநெடுந் தானைப்புல் லார்தம்மைப் பூலந்தைப் போர்தொலைத்த
செருநெடுஞ் செஞ்சுடர் வேனெடு மாறன்றென் னூடனையா
யருநெடுங் காமம் பெருகுவ தாய்விடி னூடவர்கள்
கருநெடும் பெண்ணைச்செங் கேழ்மட லூராக் கருதுவரே"

"மாவென ........... காமங்காழ்க் கொளினே"1
—(களவியல் உரை 90-00)

காழ்க்கொளல்—உறுதியாகக்கொளல்.

5. 'காமங்காழ்க் கொளின் பிறிதுமாகுப'
'காமத்தியற்கை காழ்ப்பட வுணர்ந்து'
—பெருங்கதை (1-36-7)

'நிறையுமுண்டோ காமங்காழ்க் கொளின்' —(மணிமே 5-20)
'நிறையென்பதில்லைக் காமம் நேர்நின்று சிறக்குமாயின்'
—(சூளாமணி—கல்யா 15-5)

6. 'மாவென ...............கொளினே'— எனுமிவை யானும் அவ்வண்ணம் செய்வேனெனக் குறித்தபொருள் கொண்டு முடிதலிற் குறிப்பெச்சமாம். இதனை நுவலாநுவற்சியும் என்பர்.
—(நன்—மயிலை பக். 236)

7. 'மாவென மடலுமூர்ப'
"மாவென் றுணர்மின் மடலன் று மற்றிவை"
—(நெய்தற்கலி 23-3)

8. 'மாவென் றுரைத்து மடலேறுப மன்றுதோறும்'
—(வளையாபதி)

இச்செய்யுளோடு கீழ்வருவனவற்றையும் ஒப்பிட்டுக் காண்க.

9. 'காம முழந்து வருந்தினோர்க் கேம
மடலல்ல தில்லை வலி' —(குறள். 1131)

'நோனா வுடம்பு முயிரு மடலேறு
நாணினை நீக்கி நிறுத்து' —(குறள். 1132)

'நாணொடு நல்லாண்மை பண்டுடையே னின்றுடையேன்
காமுற்றா ரேறு மடல்' —(குறள். 1133)

'தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு
மாலை யுழக்குந் துயர்' —(குறள். 1135)

'மடலூர்தல் யாமத்து முள்ளுவேன் மன்ற
படலொல்லாப் பேதைக்கென் கண்' —(குறள். 1136)

இவற்றோடு பரிமேலழகர் உரையும் காணத்தக்கது.

10. 'குனிகா யெருக்கின் குவிமுகிழ் விண்டலொடு
பனிவா ராவிரைப் பன்மலர் சேர்த்தித்
தாருங் கண்ணியுந் தைஇத் தன்னிட
மீளு மடலோன் வரவென் கொல்லென
நீர்த்துறைப் பெண்டிர் நெஞ்சழிந் திரங்கு
..............................................
றணிமடற் கலிமா மன்றத் தேறித்தன்
னணிநலம் பாடினு மறியாள்' —(துணைநாற்பது)

11. 'மாவென...கொளினே'—என்பது மடலேறுவல் என்பதற்குச் செய்யுள். —(தொல். பொருள். களவு. இளம்பூ. பக் 158)

'மறவல் வாழி தோழி துறைவர்
கடல் புரை பெருங்கிளை நாப்பண்
மடல்புனை தேறிநிற் பாடும் பொழுதே'
—தொல்-பொருள். களவு சூ. 23. மேற்.)

12. பல்லார் நக்கொளப் படுமடன் மாவேறி' —(கலி. 61-22.)

13. ''மாவென் றுரைத்து மடலேறுப மன்று தோறும்
பூவென் றெருக்கின் இணர்சூடுப புண்கொண்டே
பேயென் றெழுந்து பிறரார்ப்பவு நிற்பகாம
நோய்நன் கெழுந்து நனிகாழ்க் கொள்வதா யினக்கால்';
—(வளையாபதி)

14. ''மன்றத்து மடலேறி, நிறுக்குவென் போல்வல்யா னீடு
பழியே''—(கலி. 58-22-23)

15. ''துறைசையன்னார், கணையார், விழிதந்த காமக்
கடலைக் கடக்க நெஞ்சே, புணையாகக் கோடல்
மடலன்றி வேறு பொருளில்லையே''-
—(துறைசைக்கோவை 118)

16. அடலான வேல்விழியார் கைகொடாவிடி லாசை நெடுங்
கடலான சோகச் சுழியூ டகப்பட்ட காமுகர்தா
மடலான தோணிகொண்டே நீந்திச்சேர்வர் மணக்கரைக்கே''

—(மாறன். 125)

17. ''பெருந்தாரை வேல்விழி தந்தவெங் காமப் பிணிதனக்கு
மருந்தாவது நெஞ்சமே யில்லைவேறு மடலன்றியே''

—(தஞ்சை. 101)

'மாமடலூர்வர்' —(தஞ்சை. 102)

'பிறிதுமாகுப'—

1. 'பறம்பேறியும் பாய்வர்களே' —(துறைசை. 119)

2. 'என் தலைவனை நனிகாணேன், தீயில் வீழ்கிலேன், திண் வரை யுருள்கிலேன், செழுங்கடல் புகுவேனே'

—(திருவாசகம்-திருச்சதகம். 39)

3. ''மாமடலூர்வர் தவிர்ந்து பின்னும் வரையூர்வர்''

—(தஞ்சை. 102)

4. 'அருவரை பாய்ந்திறுது மென்பார்'

—(புறப்-வெண். 61)

5. ''வஞ்சவினைக் கொள்கலனு முடலைத்தீவாய் மடுக்கிலேன், வரையுருண்டு மாய்ப்பேனல்லேன், நஞ்சொழுகு வாளாலுங்குறைப் பேனல்லேன்.''

—(திருவிளை. திருவாதவூரடிகளுக்குப. 5[illegible])

18. 'மாவென மடலு.........கொளினே'—

''என்பது பாங்கிக்கு உலகின் மேல் வைத்துரைத்தற்குச் செய் யுள். பிறிதுமாகுப என்றது வரைபாய்தலை.''

—(இலக்கண விளக்கம். 427-பக்)

மெய்ப்பாடு :—வருத்தம் பற்றிய இளிவரல்.

பயன் :—ஆற்றாமையறிவித்தல்.

# கானல்வரி

[திரு. அ. நடராசபிள்ளையவர்கள்]

(முன் உஎ-ம் பக்கம் தொடர்ச்சி.)

இனி, இரண்டாவதாகச் சார்த்து வரியினை எடுத்துக் கொள்வோம். சார்த்து வரியாவது, கானல் வரியாகிய நாடகத்தினை, அந்நாடகம் நிகழுமிடத்தினோடு சேர்த்துக் கூறுதலாம். இதுவும் கானல் வரியாகிய நாடகத்தின் நிகழ்விடத்தைச் சிறப்பித்துக் கூறி முகம்போன்று விளங்கலின் முகச் சார்த்து வரி எனப்படும். இதன்கண் நாடகப் போக்காகிய அகப்பொருட்டுறைகளும் கூறப்பெறும். கோவலன் பாடிய சார்த்துவரிக்கண் மூன்று செய்யுட்கள் வருகின்றன. அவற்றுள் முதலது கடற்கரைக் காட்சியினையுடைய காவிரிப்பூம் பட்டினத்தின் சிறப்பினைக் கூறுகின்றது. மற்றைய விரண்டும் அகப்பொருட்டுறையினைக் கூறிப் புகாரைச் சிறப்பிக்கின்றன. அவை பின் வருவன:—

மோது முதுதிரையான் மொத்துண்டு போந்தசைந்த முரல்வாய்ச்சங்
மாதர் வரிமணன்மேல் வண்ட லுழுதழிப்ப மாழ்கியைய! [கம்
கோதை பரிந்தசைய மெல்விரலாற் கொண்டோச்சுங் குவளைமாலைப்
போது சிறங்கணிப்பப் போவார்கண் போகாப் புகாரே யெம்மூர். 1

காதல ராகிக் கழிக்கானற் கையுறை கொண்டெம்பின் வந்தார்
ஏதிலர் தாமாகி யாமிரப்ப நிற்பதையாங் கறிகோ மைய!
மாதரார் கண்ணு மதிநிழனீ ரிணைகொண்டு மலர்ந்த நீலப்
போது மறியாது வண்டூச லாடும் புகாரே யெம்மூர். 2

கரிய மலர் நெடுங்கட் காரிகைமுன் கடற்றெய்வங்காட்டிக் காட்டி
அரியசூள் பொய்த்தா ரறனிலரென் றேழையம் யாங் கறிகோமைய!
விரிகதிர் வெண்மதியு மீன்கணமு மாமென்றே விளங்கும் வெள்ளைப்
புரிவளையு முத்துங்கண்டாம்பல் பொதியவிழ்க்கும் புகாரேயெம்மூர்.

(க) ஐயனே! சிறுமியர்கள் கடற்கரை மணலின் மீது கட்டி விளையாடு சிற்றில் முதலிய வண்டலினை, மோதுகின்ற பெரிய அலைகளானே தாக்குண்டு வந்து தங்கிய ஒலியோடு கூடிய சங்கங்கள் ஊர்ந்து சென்று அழிக்க, அதுகண்டு, அவர்கள் வருந்திக் கூந்தல் அவிழ்ந்து தொங்கும்படி மெல்லிய விரல்களானே பற்றி யெடுத்து வீசுங் குவளைமாலைப் பூக்கள்,

மகளிர் கண்களைப் போன்று கடைக்கணித்துப் பார்க்க, அவ் வழியே செல்பவர்களின் கண்கள் அக்காட்சியை விட்டகலாக் காவிரிப்பூ மாநகரே எம்முடைய கவின்மிக்க ஊராம்.

(உ) "ஐயனே! முன்பு கடற்கழிகள் சூழ்ந்த சோலையின் கண் எம்மாட்டு மிகுந்த அன்புடையவராகி எமக்குப்பரிசாகக் கையுறை யேந்திக் கொண்டு எம்பின் நடந்து எம்மை இரந்தவ ராகிய இத்தலைவர், இப்பொழுது ஏதிலராகி யாம் மணந்து கொள்ள வேண்டி யிரக்கும் வண்ணம் நிற்கும் நிலை எங்கும் கண்டறியோம்" என்று வியக்கும் மாதர்களின் வாண் முகத் தமர்ந்த மதர்த்தகண்கள், அவர்கள் நீர் விளையாடுங்கால், நீரின்கட் டோன்றும் மதிநிழலினோடு சேர்ந்து மலர்ந்த நீல மலர்களோடு மயங்கிக்காண, வண்டுகள் மாதர் கண்களுக்கும் மதிநிழலின் மலர்ந்த நீலமலர்கட்கும் வேறு பாடு காணாது மயங்கும் பூம்புகார்ப் பட்டினம் எமது புகழ் மிக்க ஊராம்.

(ங) ஐயனே! நீல மலர் போன்ற நீண்டகண்களையுடைய காரிகையாகிய தலைவிக்கு அக்காலத்தில் கடற் காட்சியிற் புலப்படுந் தெய்வமாகிய இயற்கையினைச் சான்றாகக் காட்டிச் செய்து கொடுத்த வஞ்சினத்தை மறந்தாராகிய தலைவர் இங்ங னம் ஒழுக்கங் கெட்டவ ரென்பதைப் பேதையேம் அங்ஙனம் இதற்குமுன் அறிய வல்லேம்," என்று தோழி வரைவு கடாத லும், வெண்மையான சங்குகளையும், அவைகளீன்ற முத்துக் களையும் வெண்கதிர் விரிந்த மதியாகவும், விண்மீன்களின் கூட்டமாகவு முறையே கொண்டு ஆம்பல்கள் மலர்தலும் அமைந்த அழகிய புகார்நகரமே எமது புதிய ஊராம்.

இம்மூன்று செய்யுட்களும் அகப்பொருட்டுறை நாடக மாகிய கானல் வரியினை முகமுடை வரியாற் காணப் பெற்ற பாட்டுடைத் தலைவனாகிய வளவனது பதியாகிய புகாரினொடு சார்த்துக் கூறுதலின் சார்த்துவரி எனப்பட்டது. சார்த்துக் கூறுதல்-நாடக நிகழ்விடம் இதுவென நாடகத்திற்கும் நிகழ் விடத்திற்கும் நெருக்கங் கூறல். முதற் செய்யுட்கண் புகார் நக ரின் காட்சியானது கண்டார் கண்களைக் கவருந்திறத்தது எனக் கூறி, அக்காட்சியினையும் கேட்பார் மனத்தகத்தே வரைந்து சென்ற மாண்பினைக் கூர்ந்து நோக்குக. இன்னும் இரவுக்குறி நேர்ந்த தோழி தலைவனுக்குத் தன்னுட் டணியியல் கூறுந் துறைபோன்றும் கூறப்படுஞ் சொற்றிறமுங் கற்றுண ருங் காட்சியதாம். சிறுமியர்கள் தஞ் செயலுக்கு மாறானவை கண்டால் பிணக்குற்று மயிர் பிய்த்துத் துன்புறுவர் என்ற இயல்பினை இங்கு, அவர் தம் மெல்விரலால் கூந்தல் அவிழும்

வண்ணம் குவளை மாலையைப் பிய்த்தெடுத்து வீசுவர் என்ற போக்காற் புகன்றது புலனுறக் கொள்ளும் பொற்பினதாம்.

இரண்டாஞ் செய்யுட்கண் புகாரின் நீர்வளனைச் சிறப்பித்துக் கூறு முறையில் மாலை வேளையிற் பெண்கள் புனலாடுங்கால் நீர்க்குமேற் காணப்படும், அவர்கள் முகத்திடை மலர்ந்த நீலக் கண்களுக்கும், வானின் கண்ணுள்ள மதியின் நிழல் நீரிற்றோன்ற, அத்தோற்றத்தின்மீதே மலர்ந்துள்ள நீலமலர்க்கும் வேற்றுமை தெரியா வண்டினங்கள் மயங்கி இங்கு மங்குஞ் சென்று ஊசலாட்டங் கொள்வதை எடுத்துக்காட்டிய செய்தியும், அச்செய்தியோடு பொருந்த முன்னிரண்டடிகளில் தோழி தலைமகன் முன்னின்று வரைவு கடாய துறையினைப் புகுத்திய புலமையும் புந்தியிற் கொண்டு போற்ற வேண்டுவனவாம். மூன்றாஞ் செய்யுட்கண் நெய்தனிலக் கருப்பொருள்களால் புகார் பொலிவுற்று விளங்குவதோடு உரிப்பொருளாலும் உரனுற்று விளங்கக் கூறிய முறை கூர்ந்து நோக்கற்குரியதாம். ஆம்பல் சங்கினை வெண்மதியாகவும், முத்துக்களை விண்மீன்களாகவுங் கருதி மலர்கின்றது என்பதில் சங்கு முதலிய கருப்பொருள்கள் வந்துள்ளவாறு காண்க. தலைவர் சூள் பொய்த்தார் என வருந்துதல் உரிப்பொருளாம். இன்னும் முன்னிரு செய்யுட்களிலும், “மாழ்கி” “யாங்கறிகோம்,” என உரிப்பொருள் அமைந்திருக்கும் அருமையினை யாராய்க. மூன்றாஞ் செய்யுளிலும் வரைவுகடாதற் றுறைவந்து சிறப்புறுதல் காண்க.

அகப்பொருட் டுறைகளின் அமைப்பாகிய கானல் வரிக்கு முன் வந்துள்ள ஆற்று வரியிலும் சார்த்துவரியிலும் அகப்பொருளின் அணிமுடியாகிய கற்பினையும், கற்பிற்கு முதற் காரணமாகிய வரைவு கடாதலையும் வகுத்துச் சென்ற அடிகளின் ஆழ்ந்த கருத்துக்களைத் தாழ்ந்து நோக்கிச்சாற்றல் எவர்க்கும் இயலாத தொன்றாகும். மேலும் இரண்டாஞ் செய்யுளின் முதலிரண்டடிகளிற் கூறிய வரைவு கடாதற் றுறையினைக் கையுறை மறையாகவுங் கொள்ளும் வண்ணம், ‘காதலராகி வந்தார், ஏதிலராகி எம்மை இரந்து நிற்பதை எங்கறிவோம்’ (அறியமாட்டோம்) என்று பொருள் கொள்ளும் வகை சொற்களைப் போட்டு வைத்தமையும் போற்றத்தக்கதாம். இக்காலக் காவியங்களிலும், புராணங்களிலும் காணும் ஆற்றுச்சிறப்பினையும், நகர்ச் சிறப்பினையும் இங்குக் காணும் ஆற்றுவரி, சார்த்துவரி என்றவற்றோடு ஒப்பிட்டு நோக்கிப் பெறும் உள்ளக் கிளர்ச்சியை உற்றோரே இவற்றி னருமையினை உணர வல்லராவர். இவ்விருவரிகளும் கானல்வரிக்குப் பொது

வாகலின் தோழி கூற்ருகிய துறை எடுத்து மொழிதலாகவரப் பெற்றுள்ளது.

மூன்ருவதாகக் கானல்வரியினை எடுத்துக் கொள்வோம் அது முற்கூறியாங்கு நிலைவரி, திணைநிலைவரி, துள்ளல்வரி முதலியனவாக ஐவகைப்படும். அவற்றுள் நிலைவரியாவது அகப் பொருள் நாடகம் தொடங்கி நிலையுறுதற்குக் காரணமான நிகழ்ச்சியினை யெடுத்துக்காட்டும் இசைப்பாட்டுகள் என்ப தாம். அகப் பொருட்டுறைகளின் தொடக்கம் கனவின் கண்ணது என்பதும் தலைவியினைத் தலைவர் எதிர்ப்படலே களவிற்குக் காரண மென்பதும் யாவரும் அறிந்தனவாம். இயற்கைப் புணர்ச்சியும் களவிற்குக் காரணமாயினும், அது தெய்வங்கூட்டக் கூடும். அன்பு முதிராப் புணர்ச்சி யாகலான், அதனைக் கானல் வரிக்கு விலக்கி இடத்தெதிர்ப்படலாகிய இடந்தலைப் பாட்டினை எடுத்துக்கொண்டனர். இடந்தலைப்பாடு முன்பு கண்டு பழகிய முறையால் அன்பு முதிர்ந்துநிற்கு நிலைமையினை உன்னி உணர்க. இந்நிலைவரியும் மூன்று செய்யுட்களாகப் பாடப்பட்டுள்ளன. அவை வருமாறு:—

கயலெழுதி வில்லெழுதிக் காரெழுதிக் காமன்
செயலெழுதித் தீர்ந்தமுகந் திங்களோ காணீர்!
திங்களோ காணீர்! திமில்வாழ்நர் சீறூர்க்கே
அங்கணேர் வானத் தரவஞ்சி வாழ்வதுவே. 1

எறிவளைக ளார்ப்ப இருமருங்கு மோடுங்
கறைகெழுவேற் கண்ணே கடுங்கூற்றங் காணீர்!
கடுங்கூற்றங் காணீர்! கடல்வாழ்நர் சீறூர்க்கே
மடங்கெழு மென்சாயன் மகளா யதுவே. 2

புலவுமீன் வெள்ளுணங்கற் புள்ளோப்பிக் கண்டார்க்
கலவநோய் செய்யு மணங்கிதுவோ காணீர்!
அணங்கிதுவோ காணீர்! அடம்பமர்தண் கானற்
பிணங்குநே ரைம்பாலோர் பெண்கொண் டதுவே. 3

இவை மூன்றும் தமியளாக இடத்தெதிர்ப்பட்ட தலைமகளுக்குத் தலைமகன் கூறிய கூற்றுகளாம்.

(தொடரும்.)

---

# வடமொழி சென்ற தென்சொற்கள்

[பண்டித திரு. ஞா. தேவநேயப் பாவாணர்]

(கூ௨-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

மூக்கு:
மூக்கு—Peak, Eng. மூக்குப்போன்ற சிகரம்.
மூக்கு—(மூக்கம்)—(முக்கம்)—முகம்.
முகத்தல்=மூக்கினால் மணமறிதல்.
முக—முகர், முகர்தல்—மணமறிதல்.
முக—மோ 'மோப்பக் குழையும் அனிச்சம்'

முகர்—நுகர்; நுகர்தல்=1. மணமறிதல் 2. இன்பந் துய்த்தல்

முகத்தல்=விரும்புதல் 'மூர்க்கரை மூர்க்கர் முகப்பர்' (உபலக்ஷணம்)

முக—மோ. மோ+கம்=மோகம். மோகம்—மோகி; மோகித்தல்=காதலித்தல்

மோகி+அனம்=மோகனம். மோகனம் செய்யும் பேய் மகள், மோகனி—மோகினி

முகம்—முகடு=1. கூரை, மேனோக்கிய மூக்குப் போல்வது 2. உச்சி.

அண்டமுகடு=வானத்தின் உச்சி.

முகடு+இ=முகடி=1. முகட்டுத்தரத்திலுள்ள பேய், 2. மூதேவி.

முகடி—முகரி. முகடி—மோடி=1. பேய் 2. காளி.
முகடு+பூச்சி=முகட்டுப்பூச்சி—மோட்டுப் பூச்சி.
—மூட்டைப்பூச்சி.—மூட்டை, bug.

மூட்டை×பாய்ச்சால்=மூட்டைப்பாய்ச்சால் - மூட்டையைத்தின்பது.

முகடு—மோடு—மேடு, மோடு=1. உயரமானதரை. 2. பெருமை.

மூக்கு=1. பறவையின் அலகு, மூக்குப்போல நீண்டிருப்பது. beak, Eng.

2. கெண்டிமூக்கு, மூக்குப்போல்வது.
3. பயற்றின் முனைப்பக்கம், மூக்குப்போல்வது.
4. துருத்தியின் குழல், மூக்குப்போல்வது.

மூக்கு—முக்கு=1. மூலை, Nook, Eng. 2. சிறு தெரு, மூக்குப்போல் ஒடுங்கியது.

முகம்=face. மூக்கையுடையது. (தானியாகு பெயர்) அல்லது மூக்குபோல முன்பக்கமுள்ள உறுப்பு. (உவமையாகு பெயர்.)

முகம்=1. பக்கம்—வடக்குமுகம்.
=2. எதிர் – காற்று முகம்.
=3. முன்பக்கம்.

துறைமுகம்=நெய்தல் நகர்க்கு முகம்போல்வது.
நான்முகம்=நாலுக்கு முகம் போல்வது.
திருமுகம்=முகம்போலப் பேசும் கடிதம்.
ஒருமுகம்=ஒருநோக்கு. நேர்முகம்–நேர்ச்சி.
போர்முகம்=போர்க்களத்தின் முன்பக்கம்.
முகதலை=சேலையின் முன்பக்கம்.
முகம்=மேற்பக்கம். இலைமுகப் பைம்பூணிறை.
முகமன்=முகஸ்துதி.
முகத்தல்=தன் பக்கத்திற் கொள்ளுதல்.
முகவை=முகத்தலளவு.
முகில்=மேகம், நீரை முகப்பது.

முகப்பு=1. ஓர் கொடியின் முன்பக்கம்.
2. ஓர் கட்டிடத்தின் முன்பக்கம்.

முகம்–முகி–முகிழ். முகிதல்–கூடுதல்.
முகிழ்–அரும்பு, மூக்குப்போலக் குவிந்தது.
முகிழ்–மொக்குள்–மொக்கு.
முகிழ்–முகை, முகிழ்த்தல்=தோன்றுதல்.

முகிழ்—மூழ். மூழ்த்தல்=அரும்புதல் போல வாய் மூடுதல். மூழ்—மூடு—மூ. மூதல்=மூடுதல்.

முகம்—முகர்=1. முகம்.
2. முகத்தையுடைய முத்திரை.

முகர்—முகரை=முகம். (தென்னாட்டு வழக்கு.)

முகர்—முகரா—மொகரா - அரசன் முகத்தை யுடைய ஒரு நாணயம்.

முகம்+திரம்=(முகத்திரம்) மோதிரம், முகத்தை யுடையது.

முகம்+திரை=முகத்திரை—முத்திரை, முகத்தை யுடையது. திரம்—திரை.

முகம்—நுகம்=yoke, வண்டியின் முகத்திலிருப்பது. முகக்கோல்—மோக்கோல்—மோக்கால்.

முகம்—முகன். முகனை—மோனை - சீர்முகத்திலுள்ள எழுத்துக்கள் ஒன்றி வருதல்.

முகன்—முன், இடைக்குறை. முன்றானை—முந்தாணி.
முன்—முன்னே, முன்னை-முன்+ஐ=முனை, போர் முனை.

முன்—முன்பு-முன்+இ=முனி—நுனி, நுதி. முனை—நுனை.

முன்—முந்து—முன்று—முந்தல்—முதல், இடைக்குறை.
முதல்+லி=முதலி; முதலி+ஆர்=முதலியார்.
முதல்+ஆளி=முதலாளி. முதன்மை—முதுமை.
முதியோர், முதுகுடி.
மூதூர், மூதுரை.

இங்ஙனம், முகம் என்னும் சொல், பகுதி யுடையதாயும் முதலாவது மூக்கையும் பின்பு முகத்தையும் குறிப்பதாயும், நூற்றுக்கடுத்த திரிசொற்களை (Derivation) யுடையதாயும் தமிழிலுள்ளது; வடமொழியிலோ பகுதியற்றதாய் வாய் என்னும் ஒரே பொருள் யுணர்த்துவதாயுள்ளது. ஆதலால் முகம் என்பது தென்சொல்லாதல் தெற்றெனை விளங்கும். வடமொழிக்கும் தென்மொழிக்குமுள்ள பொதுச் சொற்களை வடசொல் அல்லது தென்சொல் என்று கண்டறிதற்குக் கால்டுவெல் கண்காணியர் caldwell கூறிய விதியறிந்து கடைப்பிடிக்க.

மூஞ்சு+எலி=மூஞ்செலி—மூஞ்சுரு. தூங்கு மூஞ்சி—ஓர்மரம். அழுமூஞ்சி, அடுமூஞ்சி.

முகம்=முன், முகாமை—முதன்மை, தலைமை.

முகவரி= under முகவெட்டி.

வருணம்.

வரி+அணம்=வரணம்+C. F. மரி+அணம்=மரணம்.

வரணம்—வர்ணம்—வண்ணம்—வருணம்.

வண்ணம்—பண்ணம்—பண்ணத்தி. C.F. வண்டி—பண்டி.
பண்ணம்—பண். வண்ணம்—வண்ணகம்.

வரித்தல்=வரைதல், எழுதுதல், பாடுதல்.

வரி என்பது இசைப்பாடல்களில் ஒன்று, அது ஆற்றுவரி கானல்வரி முதலிய பலவகைப்படும்.

வர்ணம்=நிறம், varnish, Eng.
=குலம், நிறத்தினு லறியப்படுவது.

=செய்யுள் அல்லது இசைப்பாடல், வரைவது போல வருணித்துப் பாடுவது.

வர்ணம்—வர்ணி; வர்ணி=வண்ணி
—வருணி.

வர்ணித்தல்=1. வரைதல்.
2. வரைதல்போலச் சிறப்பித்துக் கூறுதல்.

செய்யுளும் சித்திரமும் ஒருபொருளின் வடிவைக் காட்டுவதில் ஒன்றுக்கொன்றினமாகும். முன்னது அகக்கண்ணுக்கும் பின்னது புறக்கண்ணுக்கும் புலனும்.

இதுகாறும் கூறியவற்றால், எத்தனையோ தென் சொற்கள் வடமொழிச் சென்றுள்ளன வென்றும், அவை விழிப்பத் தோன்ருவிடினும் ஆராயத் தோன்றும் எனவும், அறிந்து கொள்க.

---

## சூது

தான் பிறந்த தொல்குலத்திற்குரிய பண்பாகிய சூது விரும்புதலைத் துரியோதனன் பாண்டவர்களைத் தோற்கடிக்கப் பயன்படுத்திக் கொண்டான். இப்பண்பை இன்னும் சித்தியர் தொல்குலமாகிய அக்குல வழிவந்த இராஜபுத்ர வகுப்பினர் உடையவர்களா யிருக்கின்றனர். (சித்தியப் பெருங்குல மக்களுக்கு வேடிக்கை விளையாட்டிலும் சூதிலும் விருப்பம் மிகவும் அதிகம் என்றும், அதுவே பின் இஸ்காந்திரேவியாவிற்கும் ஜெர்மனிக்கும் ஓடின் என்பவனுல் கொண்டுய்க்கப்பட்ட தென்றும் ஹெரடோட்டஸ் கூறுகிறுர்). பாண்டவர்களைப்போல ஜெர்மானியர்கள் தம்மையே பணயமாக வைத்துச் சூதாடி வந்தனர் என்றும், தோற்றவர்களை வென்றவர்கள் அடிமையாக விற்றுவந்தனரென்றும் டாஸிட்டால் எழுதுகிருர்.

ஜே. டாட்.

# ஆராய்ச்சிப் பகுதி-Research

## சோக்கட்டான்

[இராவ்சாஹிப் C. M. இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள்]

(முன் கசூ-ம் பக்கத் தொடர்ச்சி)

இங்கே கலிபுருஷன் என்பது மோசத்தின் உருவகமே யாகும். சாதாரணப் பொருளில் இதனைக் கூறுவோமானல், புஷ்கரன் தன்னுடைய சொக்கட்டான் காய்களில் வஞ்சனை யாக ஒரு புறத்தில் அதிக பளுவு வைத்திருக்க வேண்டு மென்று நாம் சொல்லலாம்.

இவ்வித மோசடியானது நமது நாட்டில் மாத்திரமல்ல பாரசீகம், அரேபியா முதலிய நாடுகளிலும் இருந்து வந்தது என அறியலாம். நாம் முன்னரே கூறிய குலேபகாவலி கதையில் லக்பேஷ்வா என்ற தாசியானவள் எப்பேர்ப்பட்ட தனவந்தர்கள் வந்தாலும் அவர்களை எல்லாம் ஒரு சூழ்ச்சியி ஞலே வென்று வந்தாள் என்று சொல்லப்படுகிறது. சொக்கட்டான்களை எறியும்போது பலகைக்கு அருகில் ஒரு பூனையை இரகசியமாக வைத்திருந்தாளென்றும், அப்பூனை காய்களைத் தன் எஜமானிக்கு ஏற்றபடி உருட்டி விடும் என்றும், அக்கதையில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இரகசியத்தை அறிந்த தாஜன்முலுக் என்ற புத்தி கூர்மையுள்ள ஒரு அரசகுமாரன் பூனை உருட்டி விட முடியாதபடி தந்திரம் செய்து அந்தத் தாசியை வென்று அவளை அடிமையாக்கிக் கொண்டதாக நாம் கதையில் வாசிக்கிறோம். ஆகவே மோசத்தில் மோசடி எங்கும் நிறைந்திருக்கிறது.

சொக்கட்டானுடன் இணைக்கருவியாகச் சொக்கட்டான் மணை என்ற ஒரு பலகையை உபயோகிப்பார்கள். அப் பலகையில் சதுரக் கோடுகள் இழுத்திருக்கும். மத்தியில் ஒரு சதுரமும் அதில் பல வீடுகளுமுண்டு. அச்சதுரத்தின் நாற் பக்கங்களிலும் கோடுகளை நீட்டி ஒரே அளவாக மற்றும் பல வீடுகளைக் கீறியிருப்பார்கள். இவ்விதச் சித்திரத்தில்தான் ஆட்டம் ஆடுவது. இருவர் ஆடும்போது ஒவ்வொருவர் ஒவ்வொரு காயை எதிர்ப்புறங்களில் வைத்துக் கொள்ளு வார்கள். சொக்கட்டான் காய்களை எறிந்து அதில் விழும்

எண்களுக்கு ஒத்தபடி தம்தம் காய்களை நகர்த்துவார்கள். யாருடைய காய் பழமாகிறதோ அவன் ஜெயித்தவனாவான். மத்தியில் ஒருவன் மற்றொருவனுடைய காயை வெட்டி விடுவதும் உண்டு. நடுச்சதுரத்தில் காய் போய் சேர்ந்தால் அது பழமாகும்.

தாயம்கொண்டு ஆடுகிற சதுரக்கட்ட ஆட்டத்திலும் இவ்வித முறையேதான் அனுசரிக்கப்பட்டு வருகிறது. அவ்வாட்டத்தில் சொக்கட்டான்களுக்குப் பதிலாகப் பலகறைகளை உபயோகிப்பார்கள். சாதாரணமாக 7 முதல் 12 பலகறை வரைக்கும் உபயோகப் படுத்துவதுண்டு. இவ்விதமான பலகறை ஆட்டத்திற்கு வட இந்தியாவில் பச்சிசீ (**पच्चीसि**) என்று பெயர் சொல்லுவார்கள்.

சொக்கட்டான் ஆட்டத்தை நமது நாட்டில் பொதுவாக ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் விளையாடுவார்கள். பழையகாலத்து அரசர்கள் அரண்மனைகளில் சொக்கட்டான் ஆடுவதற்கென்று அழகான மண்டபங்கள் கட்டியிருப்பதுண்டு. பலகறை ஆட்டங்கள் இக்காலத்திலும் சிறுவர்கள் சிறுமிகளால் ஆடப்பட்டு வருகின்றன. இவ்வாட்டங்கள் வெறும் பொழுதுபோக்கு ஆட்டங்கள்தான்.

நமது நாட்டிலும் சூதாட்டமானது சட்டத்தினால் தடுக்கப்பட்டு வருகின்றது. ஆகவே ஜனங்கள் இவ்வாட்டத்தை பகிரங்கமாக ஆடமுடியாது. சூதாடுகிறவர்கள் இரகசியமாக சூதாட்ட இடங்களை ஏற்படுத்திக்கொண்டு அதிகாரிகளுக்குத் தெரியாமல் விளையாடுவார்கள். ஜனசமூகம் நன்னெறி அடைய வேண்டுமாயின் சூதாட்டத்தை அறவே ஒழிக்க வேண்டியது மக்கள் கடமை. ஏனெனில் வருந்திச் சேகரிக்கும் பொருளைப் போன்று வருந்தாது வஞ்சனையால் கிடைக்கும் பொருள் நிலையாததல்லவா ?

---

# திருவஞ்சைக்களம்

[துடிசைகிழார். அ. சிதம்பரனார்]

செந்தமிழ்ச் செல்வி சிலம்பு-11 பரல்-1-ல் 18-வது பக்கத்தில் திருவாளர் C. M. இராமச்சந்திரஞ்செட்டியார் அவர்கள் திருவஞ்சைக்களத்தைப்பற்றி எழுதியுள்ளார்.

அதில், "கொடுங்கோளூரும் திருவஞ்சைக் களமும் ஒரே ஊரில் இரண்டு பாகங்களைப்போல் காணப்படுகின்றன. முற்

காலத்திலும் அவ்வாறே இருந்திருக்கலாம். ஏனெனில், சுந்தரர் தம் திருவஞ்சைக் களத்துத் தேவாரத்தில் 'கடலங்கரை மேல் மகோதை அணியார் பொழில் அஞ்சைக்களத் தப்பனே' எனப் பாடியிருக்கின்றனர் அன்றோ? சுந்தரர் இவ்வூரை 'அஞ்சைக் களம்' எனக் குறித்திருப்பது நோக்கத் தக்கது. அப்பதம் ஒருகாலும் வஞ்சி ஆகாது. ஆகவே பத ஒற்றுமையைக் கொண்டு திருவஞ்சைக் களத்தை வஞ்சி என்று கொள்ளுதல் சரியன்று. வேறு ஆதாரங்கள் தேட வேண்டும்; அல்லது, வஞ்சி வேறு ஊராக இருத்தல் வேண்டும் அல்லவா?

இன்னும் சுகசந்தேசம் முதலிய மலையாள நூல்களும், ஆராய்ச்சி செய்து தேடக் கூடிய கல்வெட்டு முதலிய சாதனங்களும் ஆராய்ந்து இவ்விவாதத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டியது சரித்திர நிபுணர்கள் கடமையாகும்"

என வரைந்துள்ளார். அதனை ஆராய்ந்து இத்துடன் இணைத்துள்ளேன்.

"அஞ்சைக் களம்" என்பது வஞ்சியின் கண் உள்ள சிவன்கோவிலுக்குப் பேர். வஞ்சி அக்காலத்தில் பெரிய பட்டினமா யிருந்தது. அதன் ஒவ்வொரு பாகமும் ஒவ்வொரு பெயரால் அழைக்கப்பட்டு வந்தது. சிவன் கோவிலுக்கு "அஞ்சிக் களம்" என்றும், சிவன் கோவிலைச் சுற்றியுள்ள ஊருக்கு "மகாதேவ பட்டினம்" அல்லது "மகோதை" என்றும், வஞ்சியின் பெரும்பாகம் கடல் கோளால் கொள்ளப்பட்டபோது பகவதி (=கண்ணகி) கோயிலைச் சுற்றி ஏற்பட்ட புதிய ஊருக்குக் "கொடுங்கோளூர்' (=கொடும்பாளூர்) என்றும் பெயர்கள் ஏற்பட்டன.

தற்காலம் சென்ன பட்டினத்தில் எழுமூர், திருவல்லிக்கேணி, மைலை, சிந்தாதிரிப்பேட்டை, தேனும்பேட்டை, புரசவாக்கம், கீழ்ப்பாக்கம், பெரியமேடு, சென்னை முதலிய பாகங்கள் இருப்பது போல வஞ்சியின் கண்ணும் பலபாகங்கள் இருந்தன. இப்போதும் சில பாகங்கள் இருக்கின்றன.

சேரர்களுடைய இராஜதானியாகிய வஞ்சிமா நகரின் தென் பாரிசத்தில் திருக்கோயில் கொண்டிருக்கும் சிவபெருமானுக்கு "அஞ்சைக் களத்து அப்பர்" எனப்பெயர்.

இப்பெயர் அவருக்கு உண்டு என்பது சுந்தரமூர்த்திகள் தாம் பாடிய "தலைக்குத் தலைமாலை யணிந்த தென்னே" என்று தொடங்குகிற தேவாரப் பாக்களின் ஈற்றில் "அஞ்சைக் களத்தப்பனே" என்று விளித்திருப்பதை நோக்கப் புலனும்.

அஞ்சைக் களத்தப்பர் கோவிலுக்கும், அதைச் சுற்றியுள்ள அணியார் பொழிலுக்கும் அவ்விரண்டினையும் சுற்றியுள்ள ஊருக்கும் மகாதேவ பட்டினம் என்று பெயர்.

(Vide Rama Varma's Institute's Bullettin No I vol. I. page 26)

நாக பட்டினத்தை—நாகை என்று நவில்வது போலவும், கோயமுத்தூரைக்—கோவை என்று கூறுவது போலவும், மகாதேவ பட்டினத்தை மகோதை என்று அழைக்கலாயினர்.

இம்மகோதையைப் பற்றித் தேவாரத்தில் குறித்திருப்பது வருமாறு:—

மலைக்கு நிகரொப்பன வன்றிரைகள்
வலித்தெற்றி முழங்கி வலம்புரி கொண்டு
அலைக்குங் கடல் அங்களமேன் மகோதை
அணியார் பொழில் அஞ்சைக் களத்தப்பனே. 1.

மடித்தோட்டந்து வன்றிரை எற்றியிட
வளர்சங்கம் அங்காந்து முத்தம் சொரிய
அடித்தார் கடலங் கரைமேன் மகோதை
அணியார் பொழில் அஞ்சைக் களத்தப்பனே. 2.

சந்தித் தடமால்வரை போற்றிரைகள்
தணியாதிடறுங் கடலங்கரை மேல்
அந்தித்தலைச் செக்கர் வானே யொத்தியால்
அணியார் பொழில் அஞ்சைக் களத்தப்பனே. 3.

மழைக்கு நிகரொப்பன வன்றிரைகள்
வலித்தெற்றி முழங்கி வலம்புரி கொண்டு
அழைக்குங் கடலங்கரை மேன் மகோதை
அணியார் பொழில் அஞ்சைக் களத்தப்பனே. 4.

ஆடுங் கடலங்கரைமேன் மகோதை
அணியார் பொழில் அஞ்சைக் களத்தப்பனே. 5.

உரவத்தொடு சங்கமொடிப்பி முத்தம்
கொணர்ந்தெற்றி முழங்கி வலம்புரி கொண்டு
அரவக் கடலங்கரை மேன் மகோதை
அணியார் பொழில் அஞ்சைக் களத்தப்பனே. 6.

ஆர்க்குங் கடலங்கரை மேன் மகோதை
அணியார் பொழில் அஞ்சைக் களத்தப்பனே. 7

அறுத்தாய், கடலங்கரை மேன் மகோதை
அணியார் பொழில் அஞ்சைக் களத்தப்பனே. 8.

வடிக்கின்றன போற் சில வன்றிரைகள்
வலித்தெற்றி முழங்கி வலம்புரி கொண்டு
அடிக்குங் கடலங்கரை மேன் மகோதை
அணியார் பொழில் அங்சைக் களத்தப்பனே. 9

அந்தண் கடலங்கரை மேன் மகோதை
அணியார் பொழில் அஞ்சைக் களத்தப்பனே. 10.

மேற்கண்ட பாசுரங்களில் எல்லாம் அஞ்சைக் களத்துக்கு "அணியார் பொழில்" என்ற அடை தவறாமல் கொடுக்கப்பட்டிருப்பதை நோக்க, அக்கோவிலைச் சுற்றிலும் உள்ள பொழில் மிகவும் அழகு வாய்ந்து சுந்தரமூர்த்திகளுடைய உள்ளத்தைக் கவர்ந்து அவருடைய உள்ளத்தை விட்டு நீங்காமல் இருந்தது என்று தெரிகிறது.

மேலும், மேற்கண்ட பாசுரங்களினால் இன்னும் என்ன தெரிந்து கொள்ளுகிறோம் என்றால், அணியார் பொழில் சூழ்ந்த அஞ்சைக் களத்தப்பர் கோவிலானது மலைகள் போல் அலைகளை எறியும் கடற்கரை மேலேயே உள்ள மகோதை என்கிற மகாதேவ பட்டினத்தில் உள்ளது என்பது.

இந்த மாதிரி ஊருக்கு ஒரு பெயரும் கோவிலுக்கு ஒரு பெயரும் உள்ள தலங்கள் பல. உதாரணமாக:—

| | ஊர் | கோவிலின் பெயர் |
|---|---|---|
| (1) | திருநல்லூர்— | பெருமணம் |
| (2) | திருக்குருகாவூர்— | வெள்ளடை |
| (3) | திருவாரூர்— | திரு மூலட்டானம் |
| (4) | திருவதிகை— | வீரட்டானம் |
| (5) | திருச்செங்காட்டங்குடி— | கணபதீச்சுரம் |
| (6) | திருப்புக்கொளியூர்— | அவிநாசி |
| (7) | திரு ஆவூர்— | பசுபதீச்சுரம் |
| (8) | திருக் கருவூர்— | ஆனிலை |
| (9) | திருக்கருவேலி— | கொட்டிட்டை |
| (10) | திருநறையூர்— | சித்தீச்சுரம் |
| (11) | திருவெண்ணெய் நல்லூர்— | அருட்டுறை |
| (12) | திருநெல்வாயில்— | அரத்துறை |

என்பனவாம்.

ஆகையால், அஞ்சைக்களம் என்பது மகோதைப் பட்டினத்தில் உள்ள சிவன் கோவிலுக்குப் பெயராம்.

தேவாரம் பாடப்பெற்ற தலங்களில் மூன்றே களம் என்னும் விகுதிபெற்று வருவன. அவையாவன:—

(1) திருநெடுங்களம் (2) திருவேட்களம் (3) திருவஞ்சைக் களம்.

களம்=இடம்—இருப்பிடம் என்று பொருள்.

அஞ்சிக்களம் என்றால் என்ன ?

அஞ்சி=எஜமானன்—சிவன்—அஞ்சு சிரசையுடையவன் என்று பல பொருள்படும். இங்கு அஞ்சு சிரசையுடைய சிவனுக்கு ஆயிற்று.

ஆகையால், அஞ்சிக்களம் என்பது சிவபெருமானுக்கு இருப்பிடம் அதாவது சிவன் கோவில் என்று பொருள்படும்.

அஞ்சி எனப்பிரிக்காமல் அஞ்சம் எனப் பிரித்தால் அஞ்சம்=அன்னம் எனப் பொருள் படும். அதாவது, அன்னப் பட்சிகள் மிகுதியாயுள்ள இடம் என்றும் பொருள் கொள்ளலாம்.

ஆனால், அன்னப் பறவைகள் அங்கு எக்காலத்திலாவது இருந்ததாக யாண்டும் காணேம்.

அன்னப் பறவையின் இனமாகிய வாத்துக் கோழிகள் மிகுதியா யிருப்பதால் அப் பெயர் பெற்றிருக்கலாம் எனக் கூற வருவரேல், வாத்துக் கோழிகள் இதைவிட மிகுதியாயுள்ள இடங்கள் பல இருக்கின்றன அவைகளுக் கெல்லாம் அப்பெயரைக் காணேம். ஆகையால் அது பொருள் அன்றென விடுக்க.

ஆகையால், அஞ்சிக்களம்=சிவன் கோவில் என்பதே பொருத்தம்.

அஞ்சிக் களம் என்னும் தொடர் மொழி பேச்சு வழக்கில் அஞ்சைக்களம் என்று திரிவு பட்டு வழங்கப்படு கின்றது.

இனி வஞ்சி என்பதன் பொருள் என்ன வென்று விசாரிப்பாம்.

சோழனுக்குக் கோழியும் (=உறந்தை) பாண்டியனுக்குக் கூடலும் (=மதுரை) எப்படியோ அப்படியே சேரனுக்கு வஞ்சி என்னும் நகரம்.

சோழ பாண்டிய இராசதானிகள் பல காரணங்களால் மாறி மாறி வந்தன. சேர இராசதானியே மாறாமல் இருந்

தது. ஆனால் வஞ்சிமா நகரின் பெரும்பாகம் கடல் கோள்களால் கொள்ளப்பட்டது. இப்போதிருக்கும் ஊர் அதன் எச்சமே.

வஞ்சி நகரம் கி. பி. 825 வரை சேர இராசதானியாக இருந்தது என்பது தாணுரவி என்னும் சேர அரசன் பாரசீக வர்த்தகனாகிய மருவன் சாபரிஸ் ஸோவுக்கு அளித்த சாசனத்தால் விளங்குகிறது.

வஞ்சிமா நகரமானது அக்காலத்தில் சீரும் சிறப்பும் எய்தி, அன்னிய நாட்டார் நாடி வரக்கூடிய வளப்பத்தை உடையதாய் இருந்தது.

வஞ்சியின் பிரதான துறைமுகமாகிய முசிரியின்கண் கி. பி. 225-ல் உரோமர்கள் தங்களுடைய வியாபாரத்தைப் பாதுகாக்க 2000 யவன வீரர்களை வைத்திருந்தார்கள் என்றும், அம்முசிரியிலேயே அகஸ்டஸுக்கு ஒரு கோவிலும் எடுத்தார்கள் என்றும் சரித்திர ஆராய்ச்சியால் நாம் அறிகிறோம். அப்படி இருக்குமானால் வஞ்சியில் ஐரோப்பா நாட்டு வியாபாரம் எவ்வளவு உன்னத நிலையில் இருந்ததென்று உன்னிப் பாருங்கள்.

வஞ்சி என்பது வாஞ்சி என்பதின் குறுக்கம்.

வாஞ்சி = ஆசைப்படு—விரும்பு. ஆகையால், வஞ்சி என்றால் அன்னிய நாட்டார் ஆசைப்பட்டு நாடி வரக்கூடிய இடம் என்று பொருளாகின்றது.

வஞ்சியை நாடிவராத ஜாதியார்களே கிடையாது. பாரசீகர்களும்—அராபியர்களும்—கிரேக்கர்களும்—உரோமர்களும்—யூதர்களும்—பாபிலோனியர்களும்—எகிப்தியர்களும்—பினீசியர்களும்—போர்த்துக்கேசியரும் வந்து வஞ்சியின்கண் தங்கி வியாபாரம்செய்து போயிருக்கிறார்கள். வஞ்சி நாட்டோடு வியாபாரம் செய்யாத நாடு நாகரீகமுள்ள நாடு ஆகாது. ஏனென்றால், நாகரீகமான சாமான்கள் வஞ்சியில் தான் கிடைக்கும்.

ஆகையால், அன்னிய நாட்டார் வாஞ்சித்து வரக் கூடிய நிலையில் இருந்ததால் அந்நகருக்கு வஞ்சி என்னும் பெயர் எய்தியது.

வஞ்சி = பெண்—பெண் தெய்வம் தருமதேவதை—வஞ்சிக்கொடி என்றும் பொருள் உண்டு.

வஞ்சிக் கொடிபோன்ற கற்புத் தெய்வமாகிய கண்ணகிக்கு அரசன் செங்குட்டுவன் கோவில் எடுத்த பிற்பாடு அந்நகருக்கு அப்பெயர் உண்டாயிற்று என்றால் அது சரித்திரத்திற்குப் பொருந்தவில்லை. ஏனென்றால், கண்ணகி கோவில் கட்டப்படுவதற்கு முந்தியே வஞ்சி என்னும் நாமம் அந்நகருக்கு உண்டு. ஆகையால், அது பொருள் அன்றெண விடுக்க.

ஆகையால், வஞ்சி என்பது யாம் மேலே கூறிய பிரகாரம் வாஞ்சி என்னும் பகுதி அடியாகப் பிறந்த ஒரு பதம் என்றும், அது பிறநாட்டாரும் விரும்பி வரக்கூடிய கடல்வளம்—மலைவளம்—நாட்டுவளம் முதலிய சொலற்கரிய வளங்களை எல்லாம் உடைத்தா யிருந்தது என்றும் கொள்க.

இனி, வஞ்சிக் களம் என்னும் தொடர்மொழி எப்படி வந்தது என்று ஆராய்வோம்.

வஞ்சியில் உள்ளது அஞ்சிக் களம். ஆகையால், எல்லோரும் வஞ்சி அஞ்சிக் களம் என்று கூறினார்கள். அது நாளடைவில் வஞ்சிக் களம் என்றாகி, கூடத் 'திரு' சேர்ந்து, திருவஞ்சிக் களம் என்று முடிந்து பிறகு பேச்சு வழக்கில் திருவஞ்சைக் களம் ஆயிற்று. திருவஞ்சிக் களம் என்பதே சரியானது.

---

வாக்குறுதியும் விருந்தோம்பலும், நாகரிகம் குறைந்தவர்களாகக் காணப்படுகிற மக்களிடமே அதிகமாகக் காணப்படுகின்றன.

—ஜேம்ஸ் டாட்.

# அறிவியற் பகுதி - Science

## தமிழ் அளவைநூற் சொற்கள்

[திரு. மா. பாலசுப்பிரமணியம், எம். ஏ.]

(முன் ௬௩-ம் பக்கத் தொடர்ச்சி)

146. ப்ரதிக்ஞை—துணிபு; மேற்கோள்
147. ஹேது—சார்பு
148. உதாஹரணம்—ஒப்பு
149. உபநயம்—இருப்பு
150. நிகமனம்—முடிபு
151. அந்வயவ்யதிரேகி—உடன்பாட்டெதிர்மறை
152. கேவலாந்வயி—தனியுடன்பாடு
153. கேவலவ்யதிரேகி—தனியெதிர்மறை
154. பக்ஷம்—துணியும்பொருளிடம்
155. ஸபக்ஷம்—துணிந்த பொருளிடம்
156. விபக்ஷம்—துணிந்த பொருளிலாவிடம்
157. சவ்யபிஸாரம்—பிறழ்ச்சி
158. அநைகாந்திகம்—பன்முடிபு
159. விருத்தம்—பகைச்சார்பு
160. சத்ப்ரதிபக்ஷம்—எதிர்சார்பு; மறுதலைச்சார்பு
161. அசித்தம்—முடிவிலாச்சார்பு
162. பாதிதம்—குறைச்சார்பு
163. சாதாரண சவ்யபிஸாரம்—பொதுப் பிறழ்ச்சி
164. அசாதாரண சவ்யபிஸாரம்—சிறப்புப் பிறழ்ச்சி
165. அநுபஸம்ஹாரிசவ்யபிஸாரம்—முடிபிலாப்பிறழ்ச்சி
166. ஆஸ்ரய அசித்தம்—உறைவிடத்து முடிவிலாச்சார்பு
167. ஸ்வரூப அசித்தம்—தன்னிடத்து முடிவிலாச்சார்பு
168. வியாப்யத்வ அசித்தம்—நிறைவிடத்து முடிவிலாச்சார்பு
169. சம்ஞாசம்ஞி சம்பந்தம்—பெயர்பொருள் இயைபு
170. ஆப்தன்—உரியவன்—Trustworthy person
171. யதார்த்தம்—உண்மை—Truth
172. வாக்யம்—பொருளுடை சொற்றொடர்—Sentence
173. பதசமூஹம்—சொற்கூட்டம்
174. ஸக்தம்—ஆற்றல்—Potency

175. ஸக்தி—ஆற்றல்—Potency
176. சங்கேதம்—ஆணை; திருவுளம்—Will
177. ஆகாங்க்ஷை—அவாய்நிலை—Verbal expectancy
178. யோக்யதை—தகுதி—Congruity
179. சந்நிதி—அண்மை—Proximity
180. பிரதிஞ்ஞாஹாநீ—மேற்கோளழிவு
181. பிரதிஞ்ஞாந்தரம்—பிறிது மேற்கோள்
182. பிரதிஞ்ஞா விரோதம்—மேற்கோள் மாறுபாடு
183. பிரதிஞ்ஞா சந்நியாசம்—மேற்கோள் துறவு
184. ஹேத்வந்தரம்—வேற்றுச் சார்பு
185. அர்த்தாந்தரம்—வேற்றுப் பொருள்
186. நிரர்த்தகம்—பொருளின்மை
187. அவிஞ்ஞாதார்த்தம்—பொருட்போலி
188. அபார்த்தகம்—பொருள்யாப்பின்மை
189. அப்பிராப்த காலம்—முறைபிறழ் கூற்று
190. நியூநம்—குன்றக்கூறல்
191. அதிகம்—மிகைபடக்கூறல்
192. புநருக்தம்—கூறியது கூறல்
193. அநநுபாஷணம்—பிற்கூற்றின்மை
194. அஞ்ஞானம்—அறியாமை
195. அப்பிரதிபை—வெற்றென விருத்தல்; விடை தோன்றாதிருத்தல்
196. விக்ஷேபம்—அச்சத்தடை
197. மதாநுஞ்ஞை—பிறன்குற்றமே கூறல்
198. பரியநுயோஜ்யோபேக்ஷணம்—பிறன்தோல்வி காட்டாமை
199. நிரநுயோஜ் யாநுயோகம் — தோல்வி யில்லதைத் தோல்வி யென்றல்
200. அபசித்தாந்தம்—உடன்பாட்டு முடிபுப்போலி

(தொடரும்)

---

# வடிவு திருந்த அறிவு வளர்ந்த வகை

[திரு. பா.வே. மாணிக்க நாயக்கர் அவர்கள்]—
திரு. க. ப. சந்தோஷமவர்கள்]

மகாபாரதமென்னும் பெருங்கதை வட இந்தியாவில் தோன்றியது. அதற்கும் தென்னிந்தியாவிற்கும் யாதொரு பற்றுமில்லை யாயினும் இங்கே குழுமியுள்ள நீவிர் யாவரும், இந்துக்களும் மற்றையோரும், நீண்டவக் கதையினை நன்

கறிந்திருக்கின்றீர்கள். இதில் திரட்டப்பட்டிருக்கும் பலப் பல கதைகளிலிருந்து ஒன்றை ஈண்டெடுத்துக்கூற விரும்புகின்றேன். "வடிவு திருந்த அறிவு வளர்த வகை" என்ற எனது பொருளைத் தொடருமுன், மகாபாரதத்திலிருந்து, குருடனாகிய திருதராட்டிரனுடைய கதையை உங்களுக்கு நினைப்பூட்ட விழைகின்றேன். திருதராட்டிரன் குருடனாய்ப் பிறந்து குருடனாய் இறந்தானென்று நீங்களறிவீர்கள். ஆயினும், அவன் வாழ்க்கை முடியுமுன் ஒருகால் பார்க்கு மாற்றலை யவனடைந்தான். இங்ஙனம் பார்வையடைந்த திருதராட்டிரன், நெடுநாள் தனக்கில்லாத கட்புலன் பெற்றமை கருதி மகிழ்ந்தானோ? இல்லை, கடிதில் அப்பார்வை தன்னைவிட்டு நீங்க வேண்டு மென்று அவன் விரும்பினான். இவ்வாறும் ஒருமகன் விரும்புவான்கொல்? குருட்டு நிலையில் மிக நீண்டகாலம் கழிந்தபின் பெற்ற பார்வையை இழந்துவிட ஒருவனும் விரும்பான். பழைய குருட்டுத்தன்மையே திருதராட்டிரன் நன்றென்று அதை விரும்பவேண்டிய காரணமென்ன? இங்கு நாமெடுத்துக்கொண்ட பொருளுக்கு இது பொருத்த முடையது. பார்வையைப் பெற்றதால் திருதராட்டிரனுக்கு வந்த துன்பம் யாது?

வடிவும் அறிவும் பொருந்திநின்று வளரும் வளர்ச்சியிற் பல பகுதிகள் உண்டென்று முன்னரே மொழிந்தேன். இவற்றுட் சில, அழகுகண்டு மகிழ்தல், நாணுடைமை, நாகரிகம் ஆகியவாம். நாணுடைமை யென்பது திடீரென்று தோன்றும் ஒருணர்ச்சியன்று. வேறு உணர்ச்சிகளும் இத்தன்மையவே. இவ்வுணர்ச்சிகள் நம்முள் தோன்றுமுன் உலகிலுள. இவைகளைப் பற்றிய நினைவுதான் வந்துபோய்க் கொண்டிருக்கின்றது. சிலருக்கு இந்நினைவு வருவதேயில்லை. வேறு சிலருக்கு இது எப்பொழுது மிருக்கின்றது. மிகக் கீழான உயிரிலிருந்து படிப்படியாக வளர்ந்து, எங்ஙனம் மக்களில் இது முதிர்ச்சிபெற்றதென்பது நாம் எடுத்துக்கொண்ட பொருளில் நீக்கமுடியாத ஒரு பகுதியாம்.

இச்சொற்பொழிவின் முதலில் ஒழுக்கத்திற் கொவ்வாத, நாணுடைமைக்குப்பொருந்தாத சிலவற்றை யான் மொழிந்தேனென்று சிறிது குழப்பமேற்பட்டது. அக்குழப்பம் என்னைச் சற்றும் அசைத்திலது. ஏனெனின், நாணுடைமை, நாணின்மை ஆகிய இவற்றிற்கு மேற்பட்ட நிலையில் யான் நிற்கின்றேன். இவ்வையகத்தை ஒரே நோக்கிற் காணக்கூடிய அளவு என் கண்கள் விரிந்திடுமாயின், யான் காண்கின்றவையெல்லாம் நாணின்மையாகத் தோன்ற வேண்டும். அவையே

அதேகாலத்தில் நாண முடையனவாகவும் தோன்றும். நாண மென்பது ஓர் அழகிய சொல்லே, நம்முடைய உளத்தின்கண் மாய்கையாற் பிறக்கின்ற ஒன்றே, என்றுணரவல்லார்க்கு நாணமும் நாணின்மையும் யாண்டுள ?

அறிவியற் றுறையின் (Evolution) ஒன்று திரிந்து வேறொன்றாதல் எனுங் கொள்கையின் அடிப்படை யாது? இடை யீடில்லா மாறுதலே அதனடிப்படையாகும் இதில் மாறுதல் தொடர்ச்சியாக வரவேண்டுமென்பது வெளிப்படை. தொடர்ச்சி யாண்டாயினும் அற்றுப்போமாயின், ஒருவட்டஞ் சுழன்று மறுபடியும் அவ்விடத்திற்கே வரவேண்டியதாகின் றது. ஒருவட்டம் முடிவு பெறும் வரையில் எக்கொள்கையை யும் நிலைநிறுத்த இயலாது. ஆதலின் ஒன்று திரிந்து வேறொன்றாதலென்ற கொள்கையை ஒருதுறையிற் செலுத்தி ஆராயுங்கால் அடியிலிருந்து முடிவரையிற்சென்று பார்க்க வேண்டும். இங்கு நாமெடுத்துக்கொண்ட நாணுடைமை என்ற பொருளை ஆராயப்புகின் நாணமின்மையிலிருந்து தான் நாம் தொடங்கவேண்டும். இதை விளக்குதற் பொருட்டுக் கணக்கிய லுண்மை யொன்றைக் கூறுகின்றேன். ஒரு நேர் கோடு வரைந்த பின், அதை ஒருபுற மிழுத்துக்கொண்டே சென்றால், புறப்பட்ட விடத்திற்கே இறுதியில் அது வந்து சேரவேண்டும். இங்ஙனந் தொடங்கிய விடத்தி லக்கோடு முடிவுபெறும் வகையை மக்கள் கருதிப் பார்ப்பதரிதாயினும் அஃதுண்மை யென்பதுறுதி. ஒருகோடு புறப்பட்ட விடத்தி லேயே வந்து கூடுவது யாண்டு நிகழுமெனின், முடிவிலாமை (Infinity)யில் நிகழுமென்க. இதுபோன்றே அறிவுடைமை யும் அறிவின்மையும் புணரவேண்டும். ஒன்றை அறிவுடைமை யென்போமெனின் அதற்கு நேர் முரண்பட்டதை அறி வின்மை என்கின்றோம். எது அறிவுடைமை? எது அறி வின்மை? என்பதை ஒவ்வொருவரும் தாங்களே தீர்மானிக்க வேண்டும். இஃது ஒருதலை, மறுதலை (Positive, Negative) ஒழுங்கிற்படும்.

முன் யான் கூறியவாறு, எனது சொற்பொழிவில் நாணங்கடந்து பேசினே னென்பது பற்றிச் சிறிது குழப்ப முண்டாயிற்று. அது குறித்து மறுபடியும் பேசப்போகின் றேன். உங்களுணர்ச்சியைப் புண்படுத்த வேண்டுமென்பது எனது நோக்கமன்று. இப்பொழுது யான் சொல்வது கொண்டு நீங்களே வாழ்க்கையில் நாணமுள்ளவை இவை நாணமற்றவை இவை என்று தெளிந்து கொள்ளலாம். நாணமின்மையாகிய பெரிய தொரு நீர்ச்சுழலில் நாமெல்லோரும் வாழ்கின்றோ

மென்பது யான் பகரப்போவதால் வெளிப்படும். என் நல்ல நண்பர்களி லொருவர், சைவசித்தாந்தத்திற் பெரும்பற்றுடையவர், எனது முதற்சொற் பொழிவைச் செவிமடுத்த பின் திடுக்கிட்டாரென்று கேள்விப்பட்டேன். யான் மொழிந்தது நேர்மையாயிருப்பினும் தவருயிருப்பினும் ஒன்று யான் கேட்க விரும்புகின்றேன். சின்னுட்களுக்கு முன் யான் திருச்சி மலைக் கோவிலுக்குச் சென்று அஷ்டோத்தரசதம் செய்வித்தேன். இதில் "ஓம் பிரஜாபதி நமோ" என்பது முதலில் வந்தது. இதற்கெவரும் தடைகூறக் காணேமே! இஃதொரு மந்திரமெனக் கருதப்படுகின்றது. இது போன்ற வேறு வழிபாடுகளுமுள. இஷ்டலிங்க பூஜையென்பது ஒன்று. இதில் கடவுளின் அடையாளமாக இலிங்கத்தை ஒருவர் கையில் வைத்துத் தேனும் பாலுங்கொண்டு முழுக்காட்டி நறுமணம் வீசும் அழகிய மலர்களைத் தூவிப் பல மந்திரங்களை ஓதுகின்றனர். இதற்கு நீங்கள் தடை கூறுவதில்லையே? உங்களைச் சுற்றி நடக்கும் நிகழ்ச்சிகளில் நாணிறந்த தன்மையுளதென்று நீங்கள் காண்கின்றீர்களா? ஒரு வேளை நீங்கள் பார்ப்பவற்றைப் பகுத்தறியுந் திறமை உங்களுக்கில்லா திருக்கலாம். இங்ஙனம் யான் பேசுங்கால் எடுத்த பொருளைவிட்டு வேருென்றில் நுழைகின்றேனென்று நீங்கள் நினைப்பீர்கள். அங்ஙனமன்று; நாணுடைமை என்ற உணர்ச்சியின் வளர்ச்சியைப் பற்றியே நான் பேசுகின்றேன்.

பெரியோர்களே! யாதாயினு மொருபொருளை அறிவியல் முறைக்கேற்ப ஆராய்ச்சிக் கெடுத்துக் கொள்வோமாயின், காய்தலும் உவத்தலும் ஒருங்கே ஒழியவேண்டும்; ஒரு துறவியின் நிலையை நாம் எய்துதல் வேண்டும். விருப்பு வெறுப்புகளுடன் ஆராய்ச்சித்துறையி லிறங்குவோமாயின் அறிவியல் பாழ்படும். எனது முதற்சொற் பொழிவை நிகழ்த்துங்கால் அறிவியல் உளப்பான்மையுடைய, விருப்பு வெறுப்பற்ற உயர்ந்தோர் முன்னிலையில் யான் பேசினேனென்று நினைத்தேன். இது பிழையென்பதை இப்பொழுது உணர்கின்றேன்.

மரங்களைப்பற்றிச் சென்ற சொற்பொழிவிற் பேசியகாலை, அவைகள் தலைகளை நிலத்தில் நுழைத்துக் கொண்டு மற்றெல்லாப் பகுதிகளையும் வெளியே வைத்திருக்கின்றன வென்று பார்த்தோம். மக்களோடு ஒப்பிடுங்கால் அவை தலைகீழாக நிற்கின்றனவென்ப துண்மையாயினும் தம்மைப் பற்றி அவைகள் அங்ஙனம் நினையாவென்பது திண்ணம். மரம் பேசுந்திறமை பெறுமாயின் மக்கள் தலைகீழாய் நிற்கின்

ளூர்களென்று அது சொல்லும். ஆனல் பேசுமாற்றல் மக்களுக்கு வாய்ந்ததுபோல் மரங்களுக்கு வாய்க்கவில்லை.

ஒரு மரத்தின் பல பகுதிகளில் மக்கள் எதை மிகுதியும் விரும்புகின்றனர்? அதன் பசிய இலைகளையும் நறுமணம் வீசும் பன்னிற மலர்களையுமன்றே மக்கள் பெரிதும் நச்சுகின்றனர்? ஒருமரத்தில் அரும்பும் முகையும் தோன்றும் நிலையில் மக்கள் அதைக் காதலிக்கின்றனர் என்று சொல்லுதலுஞ் சாலும். புலவன் அதுகண்டு பாடத் தொடங்குகின்றான். அவனது புலமை மலர் நிறைந்த மரத்தாற் புதுப்பிக்கப் படுகின்றது. புலவரல்லாத பிறரும் மலர்களைக் கண்டு மகிழ்கின்றனர். மலர் என்பதென்ன? நிலைத்திணை உயிர் நூல், இயங்குதிணை உயிர் நூல் முதலிய பல்வகைப்பட்ட அறிவியற் பகுதிகளின் கொள்கைகட் கேற்ப நோக்குவோமாயின், மலரென்பது மரங்களின் புணர்ச்சிக் கருவியேயன்றி வேறன்று. கோவிலிலுள்ள வழிபாட்டிற்குரிய உருவங்களை முழுக்காட்ட வழங்கும் தேனென்பதென்னை? தேனீக்களைத் தம்பால் ஈர்க்கும் பொருட்டு மலர்கள் சிந்துகின்ற சாறு (மதம்) அன்றே?

மரத்தின் வேரைப்பற்றி நாம் என்ன நினைக்கின்றேம்? தோற்றத்தினல் நாம் ஏமாற்ற மடைந்து வேர் பெயர்ந்து விழுந்து கிடக்கும் மரத்தைக் கண்ணுற்று இஃதொரு நகுதற்குரிய காட்சி யென்று கருதுகின்றேம். வேர் பெயர்ந்து விழுந்தமரம் தன் தலையை வெளியே காண்பிக்கின்றது. அத் தலையைக் கண்டு நாம் மகிழ்வதில்லை. ஆனல் நம்மில் நாம் மறைக்கின்ற உறுப்புக்களெவையோ அவைகளைத்தான் மரத்தில் நாம் கண்டு மகிழ்கின்றேம். இம் முறையில் மரத்தை நோக்குவது ஒரு புதுமையேயாகும். மக்களின் உடலிற்கும் மரத்தின் உருவத்திற்கும் வேற்றுமையே இல்லை. கோவிலுக்குட் சென்று அங்கே மந்திரங்களென்று கூறப்படுமவற்றைத் தமிழில் மொழிபெயர்த்துப் பாருங்கள். அப்பொழுது உங்கள் உளத்திற்கும் மெய்யறிவிற்கும் இடையே நிற்குந் திரை நீங்கும். அப்பொழுது, இதுகாறும் நீங்கள் நாணமுடைமையின்கீழ்வைத் தெண்ணிய தெல்லாம் நாணமின்மையின்பாற் படுவதை யறிவீர்கள்.

(தொடரும்)

---




## சிவஞானபோதக் கருத்து

[திரு மா. வே. நெல்லையப்ப பிள்ளை அவர்கள், B A.]

[முன் சிலம்பு ௧௩: ௫௭௨ ஆம் பக்கத்தொடர்ச்சி]

(பதிப்புரிமை ஆக்கியோர்க்குரியது)

### நான்காவது சூத்திரம் : இரண்டாவது அதிகரணம்

20. மேலே மூன்றாவது சூத்திரம் ஏழு அதிகரணங்களிலும், நான்காவது சூத்திரம் முதலாவது அதிகரணத்திலும் ஆன்மா, சூனியம், உடல், ஐம்பொறி, சூக்கும உடல், பிராண வாயு, பிரமப்பொருள், சமுதாயம், அந்தக்கரணங்கள் ஆகிய இவற்றின் ஒன்றல்லாது வேறு பொருள் என நிலைநாட்டிய ஆசிரியர் தானே விளங்கவும், கருவிகளாகிய பிறபொருள்களை விளக்கவும் வல்ல அறிவுடையஆன்மா, தானே விளங்குந் தன்மையில்லாத அந்தக்கரணங்களோடுங் கூடி அறியவேண்டுவது யாது காரணத்தினால் என்று அந்தக்கரணான்ம வாதிக்கும் பிறருக்கும் நிகழும் ஐயத்தை நீக்குதற்கு இரண்டாவது அதிகரணம் கூறுகின்றார். இதனால் அந்தக்கரண இயைபு இனிது விளங்கும்.

21. இனி, இவ்வாறன்றி ஆன்மா, மூன்றாவது சூத்திரத்திற் றொகுத்துக் கூறப்பட்டவாறு சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்ற வேறு வேறு அவத்தையுறுதற்குக் காரணம் என்னை? என்ற ஐயத்தை நீக்குதற்கு எழுந்தது இரண்டாவது அதிகரணம் என்று அதிகரண இயைபு கூறுதலும் பொருந்தும்.

22. "இவ்வான்மாச் சகச மலத்தினால் உணர்வின்று" என்பது இரண்டாவது அதிகரணத்தின் மேற்கோள். இது சூத்திரத்தில் "சகச மலத்து உணராது அமைச்சு அரசு ஏய்ப்ப அவை சந்தித்தது" என்றிருப்பதைப் பதச் சேதஞ் செய்து ஆன்மா அந்தக்கரணங்களோடு சேர்ந்து அறிதற்குக் காரணம் என்னை என்னும் வினாவுக்கு மட்டும் விடைகூறிய வாறாயிற்று. சூழ்ச்சித் திறனில்லாத அரசனொருவன் தன்

ஆணையின்கீழ் வாழும் குடிகள் நலமடைந்து வாழும் வண்ணம் சூழ்ச்சித்திறனுடைய அமைச்சர்களுடன் கூடி அரசு புரிதல் போல ஆணவமலமறைப்பால் கேவல நிலையில் அறியுந் திறன் சிறிது மில்லாத ஆன்மாவுக்குச் சகல நிலையில் இருளில் விளக்குப்போல ஏகதேசத்தில் அறிவு விளங்கும் பொருட்டு ஆன்மாவோடு அந்தக்கரணங்களாகிய கருவிகள் கூடின ஞானேந்திரியங்கள், கன்மேந்திரியங்கள், தூல சூக்கும ஐம் பூதங்கள் ஆகிய கருவிகளெல்லாம் அந்தக்கரணங்கள் தொழிற்படுதற்குத் துணைகளாய் நின்று உதவுதலின் அவை அந்தக்கரணங்களில் அடங்குவதாயின. ஆன்மா கட்டுநிலையில் கீழ்நோக்கி ஞானேந்திரியங்கள் முதலிய கருவிகளோடு கூடி உலகபோகம் நுகர்தற்கும் வீட்டு,நிலையில் மேல்நோக்கிச் சுத்தமாயா கருவிகளோடுங் கூடி சிவபோகம் நுகர்தற்கும், அந்தக் கரணங்கள் மேலேயுள்ள மாயாதத்துவக் கருவிகளுக்கும் கீழேயுள்ள மாயாதத்துவக் கருவிகளுக்கும் பாலம்போல இடைப்பட்ட மாயாதத்துவக் கருவிகளாயிருத்தலின் ஆசிரியர், பல மாயாதத்துவக் கருவிகளோடுங்கூடிச் சகல நிலையில் அறிகிற ஆன்மாவை அந்தக்கரணங்களோடு கூடியது எனச் சிறப்பாக எடுத்துக் கூறினார்.

23. 'இவ்வான்மா' என்பது மேலே கூறப்பட்டவாறு தானே விளங்கவும் மாயாதத்துவக் கருவிகளை விளக்கவும் வல்ல அறிவுடைய ஆன்மா. 'சகசமலம்' என்பது உடன் பிறந்த மலம்; அதாவது ஆன்மா என்று உளதோ அன்றே யாதொரு காரணமின்றி அநாதியே உடன் தோன்றி நிற்கும் ஆணவமலம். இடையே ஆன்மாவுக்கு இறைவனாற்கூட்டப்பட்ட ஆகந்துக மலங்களாகிய மாயை வினை மலங்களினின்று நீக்குதற்கு ஆணவமலம் சகச மலம் என விசேடித்துக் கூறப்பட்டது. 'உணர்வின்று' என்பது கருவிகளைக் கூடி அன்றித் தன்னியல்பால் அறியுமாறில்லை. அந்தக்கரணங்களில் ஒன்று அல்ல என்று நிலைநாட்டப்பட்ட ஆன்மா முதல்வனைப் போல அறிவுடைப் பொருளாயினும் தன்னோடு வேறு காரணமின்றி அநாதியே உடன் பிறந்த ஆணவமலமறைப்பினால் தன்னியல்பில் தானே அறியுமாறின்றிக் கருவிகளைக் கூடி நின்று அறியுந் தன்மை யுடையது என்பது அதிகரணத்தின் தொகைப் பொருள்.

24. முதலாவது சூத்திரத்தில் "மலத்துளதாம்" (மலத்தாலுளதாம்) என ஆணவமலத்தினது உண்மையைப் பிரமாணத்தாற் கூறிய ஆசிரியர் இச்சூத்திரத்தில் "ஆன்மா சகச மலத்துணராது" என இலக்கணத்தாலுங்கூறி வலியுறுத்

தினர். கருவிகளோடு கூடாத கேவல நிலையில் ஆன்மாவுக்கு ஆணவமலமானது அறியாமையைச் செய்கின்ற காரணத்தால் இறைவன் ஆன்மாவின்மேல் வைத்த பேரருளால் தன்னிடம் அடங்கியுள்ள மாயையை முதற்காரணமாகக்கொண்டு ஆன்மாவுக்குச் சகலநிலையில் இரவில் விளக்கொளிபோல் ஏகதேசத்தில் அறிவு விளங்குதற்பொருட்டுத் தனுகரணபுவன போகங்களைத் தோன்றச்செய்து ஆன்மாவுக்குக் கூட்டியருளினன். இங்ஙனம் இறைவனால் அளிக்கப்பட்ட தனுகரணபுவன போகங்களை ஆன்மா சேர்ந்து உலகவாழ்வில் உலக போகம் நுகரும்பொழுது ஆணவமலமானது மாயா காரியங்களாகிய தனு கரண புவனபோகங்களிலும் வியாபித்து நின்று ஆன்மாவுக்கு விபரீத உணர்வைச் செய்கின்றது. விபரீத உணர்வாவது ஒன்றைப் பிறிதொன்றாக மயங்கி அறிதல்; தானல்லாததைத் தானாகவும், தனதல்லாததைத் தன்னுடையதாகவும், நிலையுள்ளதை நிலையில்லாததாகவும், நிலையில்லாததை நிலையுள்ளதாகவும், இன்பமல்லாததை இன்பமுள்ளதாகவும் மயங்கி அறிதல். இந்த விபரீத உணர்வு காரணமாக ஆன்மா தீவினை நல்வினைகளைச் செய்கின்றது. இவ்வாறு கேவல நிலையில் ஆன்மாவுக்கு அறியாமையைச் செய்தல் ஆணவமலத்துக்குப் பொது இயல்பு; சகல நிலையில் ஆன்மாவுக்கு விபரீத உணர்வைச் செய்தல் ஆணவமலத்துக்குச் சிறப்பு இயல்பு.

25. ஆணவமலத்தைப் போலவே வினைமாயை மலங்களும் அநாதியாயுள்ளன. ஆணவமலம் அநாதியே உயிரைப் பற்றி நிற்கும்; இறைவனைப் பற்றாது. அஃது ஆன்மாவுக்குக் கேவல நிலையில், முழு இருளில் பொருளொன்றுங் காணப்படாதவாறு போல, முழு அறியாமையைச் செய்து நிற்கும்; சகல நிலையில் இரவில் விளக்கு ஒளிபோல ஏக தேசத்தில் அறிவை விளக்கி விபரீத உணர்வைச் செய்து நிற்கும். ஆணவ மலம் ஆன்மாவை விட்டு என்றும் நீங்காது; வீடு பேற்றின் கண்ணும் ஒளிமுன் இருள் கெட்டொழிதல்போல ஆணவ மல சத்தி முற்றிலும் கெட்டொழியுமே அன்றி ஆணவமலங் கெடாது. வினைமாயை மலங்கள் இறைவனிடத்தில் அடங்கியுள்ளன; அவை ஆன்மாவுக்கு, முன் கூறப்பட்டவாறு சகல நிலையில் இறைவனாற் கூட்டப்பட்டபடியால் ஆகந்துக மலங்கள் (இடையே வந்து கூடிய மலங்கள்) என்று கூறப்பட்டன. இங்ஙனம் சகல நிலையில் ஆன்மாவைக் கூடிய வினைமாயை மலங்கள் வீடு பேற்றின்கண் ஆன்மாவை விட்டு நீங்கும். ஆன்மாவினது சகல நிலையில் ஆணவமலமானது வினைமாயை

மலங்களைத் துணைக்கருவிகளாகக் கொண்டு தொழிற்படும். இவ்வாறு கூறப்பட்ட ஆணவம் வினை மாயை என்னும் மூன்று மலங்களோடு, மாயையின் காரியமாகிய மாயேயத்தை ஒரு மலமாகவும், ஆன்மாவுக்கு மலபரிபாகம் வருவித்தற் பொருட்டு ஆணவமலத்தின் வழிநின்று அதன் காரியங் களாகிய மோகம், மதம், அராகம், கவலை, தாபம், வாட்டம், விசித்திரம் என்பனவற்றைத் தொழிற்படுத்துவதாகிய சிவ சங்கற்பத்துக்கு ஏதுவாகிய திரோதான சத்தியைத் திரோத மலமென ஒரு மலமாகவும் சேர்த்து ஐந்து மலங்களாகக் கூறு தலுமுண்டு. மூன்று மலங்களாகக் கூறும் வழி மாயேய மலம் மாயையிலும், திரோத மலம் ஆணவமலத்திலும் அடங்கும். (தொடரும்)

---

# மலைபுச் சொற்றொடர்

(மால்)

ளா ளா டா டா நீ நீ கொண்டுவந்த மாடு சா சா
(இருளா, இருடா, இருநீ, கொண்டு வந்த மாடு சிறுசா
பெரிசா)

---

குகுகுகுகுகுகுகுகுகுச் செட்டிமகன்
அஅஅஅஅஅஅஅஅக் காசைப்பட்டான்
முமுமுமுமுமுமுமுமுமு மூன்று பணியாரம்
செசெசெசெசெசெசெசெசெசெக் கட்டி யனுப்பு.

(குப்பத்துச் செட்டிமகன் அப்பத்துக் காசைப்பட்டான்
முப்பத்து மூன்று பணியாரம் செப்பத்துக் கட்டியனுப்பு).

# லூதர் பர்பாங்க்

[காழி, சிவ. கண்ணுசாமி, B.A.,]

(முகப்புப் படம் பார்க்க)

"மரஞ்செடி மந்திரவாதி", "அறிவியற்றுறை கொலம்பஸ்" என லூதர் பர்பாங்க் என்ற மரநூலளவையறிஞரை அறிவியற்றுறை போகிய பேரறிஞர்கள் அழைப்பர். இப்பெரியார் 1849-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 7-ம் நாள் அமெரிக்க நாட்டிற் பிறந்தார். அவருடைய இருப்பத்தாரும் அகவையில் காலிஃபோர்னியாவிலுள்ள சாந்த ரோஸா என்ற வீட்டிற் குடிபுகுந்தார். இறுதிக்காலம் வரையில் அவர் அவ்வீட்டிலேயே வசித்து வந்தது குறிப்பிடத் தக்கதாகும்.

இயற்கை யன்னையின் எழிலில் ஈடுபட்டுத் தம்முடைய 22ல் பொருளாதிய யெல்லாவற்றையும் ஒருங்கே உவந்தளித்த பெரியார் ஒருவர் இருந்தாரென்றால் அப்பெரியார் லூதர் பர்பாங்க்தான் என்று துணிந்து கூறலாம். ஆடம்பரமற்ற அமைதியான வாழ்க்கையையே அவர் விரும்பினார். செயற்கை யழகினும் இயற்கையழகே சாலச் சிறந்தது என்பது அவர் முடிபு. எனவே நடையுடைகளிலும் ஒழுக்கத்திலும் அவர் ஆடம்பரமென்பதை அறவே யொழித்து எளிமையையே தழுவிவந்தார்.

இயற்கைக் கடிமைப்பட்ட அவர் இயற்கையின் தலையணிகளாகிய மரஞ்செடி கொடிகளில் ஈடுபடாதிருக்க முடியுமோ? செடிகளும், பூக்களும், இலைகளும், பழங்களுமே அவர்க்குற்ற நண்பர்கள் எனக் கூறலாம். அவர் உன்னியதும், எண்ணியதும், உழைத்ததும், உஞற்றியதும் அவைகளைக் குறித்தேயன்றி வேறல்ல. கணக்கற்ற பழ வகைகளையும், காய்கறி வகைகளையும், பூக்களையும் அவர் தாமாகவே, தம்முடைய அறிவு முதிர்ச்சியாலும், இடையீடுபடாத உழைப்பினாலும் புத்தம் புதியனவாகக் கண்டுபிடித்துப் புகழ்பெற்றார். மரஞ்செடி கொடிகளின் இயற்கைவாழ்வை அணுவணுவாக ஆய்ந்து உணர்ந்து மகிழ்ந்த சிறு தொகையினரான உலக அறிஞர்களில் அவரும் ஒருவர். அவை தம்முட் டாமே பேசிக்கொள்வதுண்டானால், வியக்கத்தக்க அம்மொழி நுணுக்கத்தை முற்ற அறிந்தவர் அப் பெரியாரே. தெய்வத்தானாகாதெனினும் மெய்யுழைப்புக்கொண்டு கருதியதை முடிக்கக்கூடும் என்று உலகோர்க்குச் செயற்கை முறையில் தெரித்தவர் லூதர் பர்பாங்க். தாம் மேற்கொண்ட பணியில் ஒரு சிறிதும் கடவுளின் உதவியை எதிர்பாராமல் "முயற்சியே திருவினையாக்கும்" என்பதைக் கடைப்பிடித்து தெய்வத்தையும் ஊழையும் உப்பங்கண்டார் நம் பர்பாங்க். அவர் தம் மதமாகிய கிறித்து மதத்தின் உண்மை வேதமெனக் கருதப்படும் விவிலிய நூலில் அவர் சிறிதும் நம்பிக்கை வைத்ததில்லை. அதனாலேயே அவரை அம்மதத்தினர் "அஞ்ஞானி" என்று பட்டப் பெயர் சூட்டி அழைக்கலாயினர்.

இப்பெரியாருடன் நட்புரிமை பூண்டொழுகிய பல பேரறிஞர்களில் தாமஸ் ஆல்வா எடிசன் என்பவரும் ஒருவர். லூதர் பர்பாங்க் 11-4-1926-ல் காலஞ்சென்றார். அவர் தம் நினைவுக்குறியாக அவருடைய கல்லறையின்மீது ஒரு மரம் நடப்பட்டது குறிப்பிடத் தக்கதாகும்.

# நகைச்சுவைப் பகுதி - Humour

## திருவள்ளுவர் முதற்குறள் திருத்தம்

(கபசம் எழுதியது)

### முதல்

திருவள்ளுவனர் 'அகர முதல வெழுத்தெல்லாம்' என்று தொடங்கினர். பிறகு "ஆதிபகவன் முதற்றே யுலகு" என்று முடித்தார். இவ்விரண்டு தொடர்களுக்கு மிடையே வர வேண்டிய உவமச்சொல் விடுபட்டது, 'பிழை யொன்றிரண்டு செய்தாற் பொருரோ குடியிற் பிறந்தவரே' என்ற கொள்கையைத்தழுவித் திருவள்ளுவர் செய்த இக்குற்றத்தை யான் மன்னித்து விடுகிறேன், இதை எழுதும் யான் குடியிற் பிறந்தவன் மாத்திர மல்லன்; குடியிற் சிறந்தவனுமாவன், கட்குடியன்று எனது குடி; வேறு குடி; காப்பியக் குடி (காப்பி + அ + குடி); காப்பிக்குடி எனினு மதுவே. மதுவைப் போன்றதே காப்பி என்பதை வற்புறுத்தவே "காப்பி எனினு மதுவே" என்றேன், நிற்க.

உவமச் சொல்லைவிட்டு இருதொடர்களைப் புணர்த்திய திருவள்ளுவர் குற்றத்தை நீக்கிக் குறளை முடித்துக் காண்பிக்கின்றேன்.

அகர முதல வெழுத்தெல்லா மாங்கு
பகவன் முதற்றே யுலகு.

இஃது எவ்வளவு அழகாயிருக்கின்றது பாருங்கள்! உற்றுப் பார்த்து உவகைகொள்ளுங்கள். இப்படிக் குறள் செய்வது எளிதாயிருக்க ஆதியை ஏனழைக்கவேண்டும்? மற்றும், உலகு ஆதிபகவன் முதற்றே என்பதில் ஆதி சொல்லுக்குப் பொருளாகிய முதலென்னுஞ் சொல்லை அமைப்போமாயின், "முதற்பகவன் முதற்றே யுலகு" என்ருகின்றது. முதலென்னுஞ்சொல் இங்ஙனம் இரட்டித்தல் பொருந்துகின்றதா, பாருங்கள்? இது கொண்டே இக்குறளில் யான் செய்த திருத்தத்தின் சிறப்பை நீங்களறிந்து கொள்ளலாம்.

இங்கே கபிலரழைப்பிற் கூறியது உண்மைதானேவென்று ஓர் ஐயம் நிகழ்கின்றது.

கபிலரழைப்பு=கபிலரகவல் உலகத்தீரே! உலகத்தீரே! என்று அழைத்தமை காண்க.

ஆதி பகவனென்ற தமது தாய் தந்தையர் பெயரைக் கொணர்தற்பொருட்டே வள்ளுவர் இம்முதற் குறளை, அஃது இருக்கின்றவாறமைத்தாரோ? அறிவுரைகொண்டு சென்னையிற் சிலரைக் கொத்திய மறைமலையடிகள் "ஆதிபகவன்" என்ற சொற்றொடரை இக்குறளில் அமைத்தது இது பற்றியே யென்று துணிந்து கூறுகின்றார். துணிவதிலும் துணிப்பதிலும் அவாவல்லுநர் என்பதற்கு அறிவுரைக்கொத்தே இலக்கியம், நிற்க.

முதற்குறளை மேற்சென்று பார்ப்போம்.

அகர முதல வெழுத்தெல்லா மாங்கு
பகவன் முதற்றே யுலகு.

பகவன் என்பதைப் பகவு + அன் எனப் பிரித்து "பிரிப்பவன்" (அழிப்பவன்) என்று பொருள்கொள்க. இங்ஙனஞ் செய்வோமாயின் அழிப்பவன் முதற்றே யுலகு என்று இரண்டாமடிக்குப் பொருள் கொள்ளல்வேண்டும். இது "அந்த மாதி என்மனார் புலவர்" என்ற சிவஞானபோதச் சூத்திரக் கருத்தொடு ஒன்றுதல் கண்டு மகிழ்க.

---

## செய்திகளும் குறிப்புகளும்
## News and Notes

ஏறக்குறைய நாற்பதாண்டுகட்குமுன் நடைபெற்ற போரில் அபிஸீனியர்கள் இத்தாலியர்களை அடோவா என்ற இடத்தில் மடிக்க முடியாத வகையில் முறியடித்தனர். அத்தோல்வியை ஒரு சிறிதும் உளத்திலிருந்து அகற்றமுடியாமல் இத்தாலியர்கள் வஞ்சம் தீர்க்க வகை தேடிக்கொண்டிருந்தனர். சென்ற எழு ஆண்டுகளாக அதற்கு வேண்டிய போர்த்தளவாடங்களையும் சேகரித்து வந்தனர். நீறு பூத்த நெருப்புப் போலிருந்த அவர் தம் சினம் சென்ற அக்டோபர் 4-ம் நாள் கொழுந்துவிட் டெரியலுற்றது. எற்ற காரணம் எதுவுமின்றி அபிஸீனியர்களுக்குரிய எரெட்ரியா என்ற

பகுதியிற்புகுந்து அடோவாவைக் கோரமான போர் புரிந்து கைப்பற்றினர். அபிசீனியர்களுக்கும் இத்தாலிக்கும் இப்பொழுது கடுமையான சண்டை நடந்துவருகிறது. நாகரிக முதிர்ச்சியின் பயனும் எதை விலக்கியபோதிலும் போரை விலக்க முடியாது போலும்!

---

## சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம்
### சொல்லாராய்ச்சிக் கூட்டம்

இக்கூட்டம் 29-9-35 ஞாயிற்றுக்கிழமையன்று திருநெல்வேலி மந்திரமூர்த்தி ஹைஸ்கூல் கட்டிடத்தில் திருவனந்தபுரம் தமிழ்ப் புலவரும் பாவலரும் ஆகிய உயர்திரு. T. இலக்குமண பிள்ளையவர்கள் தலைமையில்கூடி ஐந்து நாட்கள் வரை நடைபெற்றது. இக் கூட்டத்தினர் ஸ்ரீவில்லிபுத்தூர் திரு. A. சீனிவாசாச் சாரியார் பி.எ., எல்.டி. அவர்களாலும், ஒரத்தநாடு திரு. T. S. வேலாயுதம் பிள்ளை, பி.எ., எல்.டி. அவர்களாலும் எழுதியனுப்பப்பெற்ற தமிழ் அறிவியற் சொற்களின் அச்சுப் படியினைப் படித்து ஆய்ந்து முடிவு கட்டினர். இதுபற்றி டிசம்பர் விடுமுறையில் மற்றொரு கூட்டமும் நடைபெறுமெனத் தெரிந்து மகிழ்கின்றோம்.

---

## தென்னிந்திய சைவசித்தாந்த சங்கம்
### 15-வது ஆண்டு விழா
## தென்னிந்திய தமிழ்ச் சங்கம்
### 7-வது ஆண்டு விழா

இவ்விரண்டு விழாக்களும் முறையே திருநெல்வேலி மந்திர மூர்த்தி ஹைஸ்கூலில் தனியே அமைக்கப்பெற்ற பந்தலில் உயர் சைவத் திருவாளர் திவான்பகதூர் P. சுப்பையா முதலியாரவர்கள், பி.எ., பி.எல். (Retired District Judge) தலைமையில் 4-10-35 வெள்ளிக்கிழமையன்றும், 5-10-35 சனிக்கிழமையன்றும் மாலை 4 மணி முதல் இரவு 10 மணிவரை பல அரிய சொற்பொழிவுகளுடன் இனிதே நடைபெற்றன.

---

சிவாகம சங்க வெளியீடு :

தேவிகாலோத்தர ஆகமம் தமிழ்மொழிபெயர்ப்புடன் புதிதாக வெளிவந்துளது. விலை அணா 10.

எம்மிடம் கிடைக்கப் பெறும்.



மதுரை
எம். திரவியம் பிள்ளை



சென்னை
டாக்டர் எஸ். அரங்காச்சாரியார்

155-ஆம் பக்கம் பார்க்க.